விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 011 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 15 செவ்வாய்க்கிழமை (30.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## முல்லைத்தீவில் சிறுமியின் மரணத்துக்கு நீதி கோரி கவனயீர்ப்புப் போராட்டம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் உணவு ஒவ்வாமை காரணமாக அனுமதிக்கப்பட்ட சிறுமியின் மரணத்திற்கு நீதி கோரி முல்லைத்தீவு மக்களால் 04ஆம் பக்கம் பார்க்க

படகு வழங்கலில் முறைகேடு

## வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் முன் கவனயீர்ப்புப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு நாகர் 15ஆம் பக்கம் பார்க்க

## பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்கள் போராட்டம்

(கொழும்பு)

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்கள் இன்று ஒரு நாள் அடையாள தொழிற்சங்க போராட்டத்தில் ஈடு 15ஆம் பக்கம் பார்க்க

# ஜனநாயக உரிமைகளை இல்லாதொழிக்க முயற்சி

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



(பொலநறுவை)

அநுர அரசாங்கம் பொதுமக்களின் ஜனநாயக உரிமைகளை இல்லாதொழிக்க முயற்சி செய்து வருகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

விவசாய, மீனவ


## ஓய்வூதிய காலம் நீடிப்பு

(கொழும்பு)

டித்வா புயல் காரணமாக மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு சலுகை வழங்கும் வகையில், ஓய் 15ஆம் பக்கம் பார்க்க

திருகோணமலை – சம்பூர் கடற்கரையில்

## இந்தியாவால் விண்ணுக்கு ஏவப்பட்ட ரொக்கெட்டின் ஒரு பகுதி கரையொதுங்கியது



(திருகோணமலை)

திருகோணமலை, சம்பூர் - மலைமுந்தல் கடற்பரப்பில் நேற்று முன்தினம் (28) மாலை பாரிய அளவிலான மர்மப் பொருள் ஒன்று கரை ஒதுங்கியுள்ளதால் அப்பகுதி மக்களிடையே பெரும் பரபரப்பு 15ஆம் பக்கம் பார்க்க

தாழையடி கடற்கரையில்

## காணாமல்போன இளைஞனை தேடும் பணி தொடர்ந்து முன்னெடுப்பு

(கரணவாய்)

தாழையடி கடற்கரையில் காணாமல்போன இளைஞனைத் தேடும் பணி தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு தாழையடி கடற்கரைக்கு நண்பருடன் நேற்று முன்தினம் நீராடச் சென்ற இரண்டு இளைஞர்கள் கடலில் தத்தளித்த போது அவர்களை கயிறு கொடுத்து காப்பாற்றிவிட்டு கரை திரும்பும்போது 15ஆம் பக்கம் பார்க்க

## 131 கிலோ கஞ்சா கிளிநொச்சியில் மீட்பு



15ஆம் பக்கம் பார்க்க

## மின்சார வாகன சார்ஜிங்

### சீனாவிடம் கோரிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதும் மின்சார வாகன சார்ஜிங் (charging points) மையங்களை 15ஆம் பக்கம் பார்க்க

கணக்காய்வாளர் பதவிக்கு

## வேறு ஒருவரின் பெயர் விரைவில் பரிந்துரை

### ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

கணக்காய்வாளர் நாயகம் பதவிக்காக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வினால் பரிந்துரைக்கப்பட்ட பெயர்களை அரசியலமைப்புப் பேரவை தொடர்ச்சியாக நிராகரித்து வரும் நிலையில், மற்றுமொரு நபரின் 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை தரம் 6 அனுமதி தொடர்பான அறிவித்தல் - 2026

கல்வி அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் 2026ஆம் ஆண்டிற்கான தரம் 6 மாணவர் அனுமதி 05.01.2026 ஆம் திகதி திங்கட்கிழமை கீழ் வரும் ஒழுங்கில் நடைபெறும்.

| | தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2025 இல் |
|---|---|
| காலை 8.30 மணிக்கு - | 153 உம் அதற்கு மேல் புள்ளி பெற்றவர்களுக்கும். |
| காலை 11.00 மணிக்கு - | 145 - 152 இற்கு இடையில் புள்ளி பெற்றவர்களுக்கும். |

அனுமதியை மேற்கொள்வதற்கு உரிய ஆவணங்களுடன் உரிய நேரத்திற்கு வருகை தந்து அனுமதியை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (அனுமதி கிடைக்கப்பெற்ற மாணவர்களுக்கு தேவையான ஆவணங்களின் விபரத்துடன் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.)

செல்வி G.D. தேவராஜா
அதிபர்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

(C-4695)

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி மத்தியில் சமூர்த்தி வீதியில் (வாங்கி வீதியில்) 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- ◆ தார்றோட் முகப்புடன் இரண்டு பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ◆ பரம்பரைக்காணி, 1951ம் ஆண்டு உறுதி, தோம்பு யாவும் உண்டு.
- ◆ வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலை அமைப்பதற்கும் உகந்த இடம்.
- ◆ குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, செம்மண் தரை, நன்னீரூற்று,
- ◆ அமைதியான சூழல்.

ஒரு பரப்பின் விலை : பதினைந்து இலட்சம் (1500,000/=)

தொடர்புகளுக்கு:
076 763 8141, 076 765 8176

(6423)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, சுவாட்ஸ்லேனில் 5 அறைகளுடன் தனித் தனி குளியலறைகளுடன் கூடிய மேல்தளத்தில் அமைந்த வீடு வாடகைக்கு உண்டு.
(அலுவலக பாவனைக்கு உகந்தது)

**077 148 4540**

(C-4699)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்
### புதிய அனுமதிகள்

**கல்வியியல் முதுமாணி 2025/26 (அணி XVI) - யாழ்ப்பாண நிலையம்**

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களை உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் வலைத்தளத்தில் (www. grad. jfn.ac.lk) பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி 25/01/2026


மேலதிக தொடர்புகளுக்கு 0212223608

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(C-4697)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கணக்குக்கிளையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி **தபேந்திரன் நிசாந்தினி** அவர்களின் அன்புத் தந்தையார்



### அமரர் கந்தையா பேரின்பம்


| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24.03.1948 | 28.12.2025 |

அவர்கள் 28.12.2025 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்.... **பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

(C-4694)

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18 - 09 - 2000 | 08 - 12 - 2025 |

### புஸ்பராசா சுஜான்

வளர்பிறை, ஊரெழு கிழக்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பராசா சுஜான் அவர்கள் கடந்த 08.12.2025 திங்கட்கிழமை ஜேர்மனியில் அகால மரணமடைந்தார்.

அன்னார் புஸ்பராசா - புஸ்பலதா தம்பதியினரின் அன்பு மகனும் சுஸ்மிந்த் (சுஜி), நிஸ்மிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2025) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 4.00 மணியளவில் புன்னாலைக் கட்டுவன் விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

"வளர்பிறை"
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்
077 161 3514

(C-4698)

## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 . 05 . 1984 | 03 . 12 . 2025 |

எம்மை நல்வழி நடாத்திய எங்கள் குடும்பத் தலைவன்

### அமரர் முருகேசு சாந்தரூபன்
(லான் மாஸ்டர் சாந்தன்)

அவர்கள் சிவபதம் அடைந்த செய்தி கேட்டதும் உடன் வந்து உதவி செய்ததோடு மரணச் சடங்கிலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகளை பிரசுரங்கள் மற்றும் பதாதைகள் மூலம் வழங்கியவர்களுக்கும் தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்களின் ஊடாக அனுதாபச் செய்திகளைப் பகிர்ந்தவர்களுக்கும் மலர்மாலைகள் அணிவித்தும் நேரில் கலந்து பிரார்த்தனை செய்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிய உள்ளங்கள் அனைவருக்கும் எமது அன்பார்ந்த நன்றிகளை மனமுவர்ந்து இத்தால் நவில்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 31.12.2025 நாளை புதன்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 02. 01.2026 வெள்ளிக்கிழமை பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறவிருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.**

ஆயுள்வேதம் முன்பாக கைதடிச் சந்தி,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்
077 089 6568

(1851)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் இதுவரை
# 2,545 வீதி விபத்துக்கள்
## வீதி பாதுகாப்பு பிரிவு தகவல்

(கொழும்பு)


**இலங்கையில் 2025 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் 2,545 வீதி விபத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவின் பிரதி பொலிஸ் மா அதிபர் டபிள்யு. ஜி. ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார்.**

பொலிஸ் ஊடகப் பிரிவில் நேற்று திங்கட்கிழமை காலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே பொலிஸ் போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவின் பிரதி பொலிஸ் மா அதிபர் இதனை தெரிவித்துள்ளார்.

பொலிஸ் போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவின் பிரதி பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவிக்கையில்,

2025 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் வீதி விபத்துக்களால் 2,692 பேர் உயிரிழந்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025 ஆம் ஆண்டில் அதிகளவான வீதி விபத்துக்கள் இடம் பெற்றுள்ளன.



அதன்படி, 2024 ஆம் ஆண்டை விட 2025 ஆம் ஆண்டில் வீதி விபத்துக்கள் 272 ஆக அதிகரித்துள்ளதுடன் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 317 ஆக உயர்வடைந்துள்ளதாக பொலிஸ் போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவின் பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். (நி)

# யாழ்ப்பாணம் மற்றும் புத்தளத்தில் காற்றின் தரத்தில் ஆரோக்கியமற்ற நிலை
## முகக்கவசம் அணிவது சிறந்தது



(கொழும்பு)

இலங்கையின் பல நகர்ப்புறங்களில் காற்றின் தரம் "சற்று ஆரோக்கியமற்ற" நிலையை எட்டியுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் காற்றின் தரச் சுட்டெண் 48 முதல் 112 வரை நிலவக்கூடும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் (100-108) மற்றும் புத்தளம் (104-112) ஆகிய பகுதிகளில் காற்றின் தரம் "சற்று ஆரோக்கியமற்ற" மட்டத்தில் இருக்கும்.

அத்துடன் மொனராகலை மாவட்டத்தில் காற்றின் தரச் சுட்டெண் மிகக் குறைந்த அளவாக 46ஆக பதிவாகியுள்ளது.

காற்றின் தரச் சுட்டெண் முக்கியமாக PM2.5 எனப்படும் நுண் துகள்களின் அளவை வைத்தே கணக்கிடப்படுகிறது.

இவை சுவாசிக்கும்போது நுரையீரலுக்குள் ஊடுருவிச் சென்று பல்வேறு சுகாதாரப் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியவை.

காற்றின் தரம் குறைந்துள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் மாசு அதிகம் உள்ள நேரங்களில் வெளிப்புற நடவடிக்கைகளைக் குறைத்துக்கொள்ளுமாறும், தேவையேற்படின் முகக்கவசம் அணியுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (நி)

# மரக்கறிகள் இறக்குமதி செய்யப்படமாட்டாது!
## அரசாங்கம் அறிவிப்பு



(கொழும்பு)

விசேட அனுமதி தவிர்த்து, ஏனைய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மரக்கறிகள் இறக்குமதி செய்யப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதன்படி வானூர்தி சேவை போன்ற சில நிறுவனங்களுக்கு குளிரூட்டப்பட்ட மரக்கறிகளை இறக்குமதி செய்ய வழங்கப்பட்ட அனுமதியைத் தவிர, வேறு எந்தத் தரப்பினருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்று அரசாங்கம் கூறியுள்ளது.

வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க கருத்துரைக்கையில் இந்த விடயத்தை தெரிவித்தார்.

முன்னதாக டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட அனர்த்தங்களை அரசாங்கம் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி, மரக்கறியை இறக்குமதி செய்வதாக தேசிய விவசாயிகள் ஒற்றுமை அமைப்பு குற்றம் சுமத்தியிருந்தது.

தேசிய விவசாயிகள் ஒற்றுமை அமைப்பின் தலைவர் அனுராத தென்னகோன் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

நுவரெலியா, கண்டி, பண்டாரவளை, பதுளை மற்றும் மாத்தளை உள்ளிட்ட சில முக்கிய பிரதேசங்களில் போதுமான மரக்கறி செய்கை முன்னெடுக்கப்படுகிறது.

இருப்பினும் பண்டிகைக் காலத்தில் எதிர்பார்க்கப்படும் பற்றாக்குறையை காரணம் காட்டி, மரக்கறியை இறக்குமதி செய்வதற்கு அர சாங்கம் திட்டமிட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனிப்பட்ட இலாபத்தை நோக்கமாகக்கொண்டு, மரக்கறியை இறக்குமதி செய்வதற்கு வர்த்தக அமைச்சு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இந்த நடவடிக்கை தொடருமாயின், இறுதியில் உள்ளூர் மரக்கறி செய்கை வீழ்ச்சியடையும் என தேசிய விவசாயிகள் ஒற்றுமை அமைப்பின் தலைவர் அனுராத தென்னகோன் எச்சரித்துள்ளார்.

இந்த நிலையில் இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் வர்த்தக அமைச்சர் வசந்த தெரிவிக்கையில், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மரக்கறிகள் இறக்குமதி செய்வதற்கான திட்டம் அரசாங்கத்திடம் இல்லை.

டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக நாட்டின் வடக்கு முதல் தெற்கு வரையான விவசாயக் காணிகள் பாதிக்கப்பட்டன.

இருப்பினும் வயல்கள் உள்ளிட்ட சில விவசாயக் காணிகள் மீண்டும் பயிர்ச் செய்கையினை மேற்கொள்ளக்கூடிய நிலையில் உள்ளன.

இதன்காரணமாக, குளிரூட்டப்பட்ட மரக்கறிகளை இறக்குமதி செய்வதற்கு அவசியமில்லை என்றும் வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார். (நி)

# காலவரையறையற்ற போராட்டத்தில் குதித்த மண்டபம் மீனவர்கள்

(சென்னை)

இலங்கை கடற்படையினால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்கள் மூன்று பேரை படகுடன் விடுதலை செய்ய வலியுறுத்தியும், இலங்கை கடற்படை கைது நடவடிக்கையை கண்டித்தும் மண்டபம் கோயில்வாடி மீனவர்கள் நேற்று முதல் தொடர் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் 300 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளதுடன் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் வேலை இழந்துள்ளனர்.

இராமநாதபுர மாவட்டம் மண்டபம் வடக்கு கோவில் வாடி மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடந்த சனிக்கிழமை காலை 300 இற்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் மீனவர்கள் மீன் பிடிக்கக் கடலுக்குள் சென்றனர்.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை மீனவர் கள் நெடுந்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது ஜோசப் என்பவருக்கு சொந்தமான விசைப் படகையும் அதிலிருந்த அமொஸ்டின், ஜோன்தாஸ், பரலோக ஜெபஸ்டின் ஆகிய மூன்று மீனவர்களையும் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக படகுடன் இலங்கை கடற்படை கைது செய்து காரைநகர் கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றனர்.

பின்னர் மீனவரிடம் முதற் கட்ட விசாரணை முடித்துக் கொண்டு மீனவர்களை யாழ்ப்பாணம் மீன்வளத் துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது வழக்கை விசாரித்த நீதிபதி மீனவர்கள் மூவரையும் எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதி வரை நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து கோயில் வாடி மீனவர்கள் இலங்கை கடற்படையின் கைது நடவடிக்கையை கண்டித்தும், மத்திய மாநில அரசுகள் உடனடியாக படகுடன் சிறை பிடிக்கப்பட்ட மீனவர்கள் மூன்று பேரையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் நேற்று முதல் தொடர் காலவரையற்ற போராட்டத்தில் குதித்துள்ளனர். (நி)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல் - 2026
## கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை, பொதுமலசலகூடம் ஆகிய குத்தகை நிலையங்களை 2026.01.16- 2026.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப் படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி** :- 2025.12.30 - 2026.01.12
**(அலுவலக நாட்களில் மு.ப 09.00 - பி.ப 01.00)**

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி**
**:-2026.01.13 செவ்வாய்க்கிழமை மு.ப10.00**

**கேள்விதிறக்கும் திகதி** **:-2026.01.13 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00**

**கேள்விதிறக்கும் இடம்** **:- கரைச்சி பிரதேசசபை தலைமை அலுவலகம்.**

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை எம்மால் வழங்கப்பட்ட கடித உறையில் தவிசாளர்/செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என முகவரியிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிட்டு 2026.01.13 ஆம் திகதி **செவ்வாய்க்கிழமை** மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்வி பெட்டியினுள் மேற்குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும்.

இரண்டாவது பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என முகவரியிட்டு குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவு தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விகள் யாவும் **2026.01.13**ஆம் திகதி **செவ்வாய்க்கிழமை** மு.ப 10.00 மணிக்கு கரைச்சி பிரதேச சபையில் கேள்விச் சபை முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச் சபையின் முடிவே இறுதி முடிவாகும். கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரர் பிரசன்னமாகி இருக்கலாம்.

| இல | குத்தகை நிலையம் | கேள்வி வைப்பு பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்வி படிவ கட்டணம் மீளளிக்க முடியாதது | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வி தொகை |
|---|---|---|---|---|
| மத்திய பேருந்து நிலையம் -கிளிநொச்சி | | | | |
| 01 | கிளிநொச்சி பேருந்து நிலைய சிற்றுண்டிச்சாலை | 24,000.00 | 1,000.00 | 1,200,000.00 |
| 02 | கிளிநொச்சி பேருந்து நிலைய பொதுமலசலகூடம் | 1,000.00 | 1,000.00 | 40,000.00 |

**நிபந்தனைகள்**

1. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் எதுவித அறிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும்.
2. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்தத் தவறியவர்களும், கறுப்பு பட்டியலில் உள்ளவர்களும் குத்தகை கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்கள்.
3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ கேள்விசபைக்கு அதிகாரமுண்டு
4. கேள்விதாரர் இலங்கை பிரஜையாகவும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் கரைச்சிப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள வரும்போது தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணத்தின் நிழற்பிரதியை (தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதி பத்திரம்) உண்மைப் பிரதி என சான்றுப்படுத்தி சமர்ப்பிப்புடன், கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
6. கேள்வி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது சபையால் வழங்கப்பட்ட கேள்விப்பத்திரம், கடித உறை என்பவற்றை மட்டுமே பயன்படுத்த முடியும்.
7. கேள்வி விண்ணப்பங்களை விண்ணப்பதாரி அடையாள அட்டையுடன் நேரில் சமூக மளித்து பெற்றுக்கொள்ள வேண்டும்.
8. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வி தொகையின் மூன்றில் ஒரு பகுதி தொகையினை அன்றைய தினமே செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
9. குத்தகை நிலையங்கள் அனைத்தும் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்பட வேண்டும். குத்தகைதாரர் தவிர்ந்த வேறு ஒருவரால் குத்தகை நிலையம் நடாத்தப்படின் உடனடியாக ஒப்பந்தம் இரத்து செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.
10. மாதாந்த குத்தகைக் கட்டணங்களை அம்மாத இறுதி வேலை நாட்களுக்குள் செலுத்துதல் வேண்டும். குறித்த கால எல்லைக்குள் செலுத்தத்தவறின் மாதாந்தக் கட்டுப்பணத்துடன் 10% தண்டப் பணத்தையும் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும்.
11. தொடர்ச்சியாக இரு மாதங்கள் குத்தகைகட்டணங்கள் செலுத்தத் தவறும் பட்சத்தில் எதுவித முன்னறிவித்தலுமின்றி குத்தகை நிலையம் சபையால் பொறுப்பேற்கப்படும்.
12. ஆரம்பகேள்வி தொகையைவிட குறைவான கேள்வி கோருபவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்பட மாட்டாது என்பதுடன் அவர்களது பெயர்கள் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்படும்.
13. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக சபையினால் காலத்துக்குகாலம் விதிக்கப்படும் எழுத்து மூல நிபந்தனைகளையும் குத்தகைதாரர் கடைப்பிடிக்க வேண்டும்.
14. இந் நிபந்தனைகள் தொடர்பாக சபையின் எந்தவித முடிவையும் ஏற்பதுடன் இது தொடர்பில் சபைக்கெதிராக நீதிமன்றநடவடிக்கை எதனையும் மேற்கொள்ளமுடியாது.

**தவிசாளர்**
**கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.** (உ-4701) **30.12.2025**

## முல்லைத்தீவில்...

முல்லைத்தீவு மாவட்ட மாஞ்சோலை வைத்தியசாலைக்கு முன்பாகப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டி ருந்தது.

கடந்த 21.12.2025 அன்று முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியில் வசிக்கும் குகநேசன் டினோயா எனும் 13 வயதுச் சிறுமி சாதாரண உணவு ஒவ்வாமை காரணமாக மாஞ் சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலை யில் மரணமடைந்திருந்தார். குறித்த சிறுமியின் மரணத் தில் சந்தேகம் இருப்பதாகவும் குறித்த சிறுமியின் மரணத் திற்கு நீதிகோரியும் இனியும் இவ்வாறானதொரு இழப்பு ஏற்படாதிருக்கவும் முல்லைத்தீவு மக்கள் சமூகத்தினரால் நேற்றுக் காலை 10 மணியளவில் கண்டனப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டத்தில் டினோயாவுக்கு நடந்த கொலை தொடர்பான உண்மைத்தன்மையினைப் பணிப்பாளர் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும், கொலைச் சம்பவத் துடன் தொடர்புடைய வைத்தியர், தாதியர்களுக்கு அரச சேவையில் தொடர அனுமதியளித்துள்ளீர்களா? இவ்வா றாக நீதிநெறிமுறைக்கு முரணாகச் செயற்படும் வைத்தியர் கள், தாதியர்களுக்கு எவ்வாறான நடவடிக்கை எடுத் துள்ளீர்கள்? என பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல நூற்றுக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடு பட்டிருந்தனர்.

சாதாரண ஒவ்வாமைக்காக நடந்து வந்த உன்னை நடைப்பிணமாக மாற்றினார்கள். பைத்தியமா? வைத்தி யமா?எங்கே அந்தக் கொலைகாரர்கள்? நீதி வேண்டும்.

ஒன்றாக சந்தோசமாக வாழும் நாட்டில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் இவ்வாறான சதிவேலை களை செய்து ஏன் மக்களை ஏமாற்றுகின்றீர்கள்? ஒன்றோ இரண்டோ பிழைகளை விடுகின்றீர்கள்? ஏன் மக்களை ஏமாற்றுகின்றீர்கள்? நீதி பெறும் வரை எங்கள் குரல் ஓயாது?சிறுமியின் கனவுகள் மருத்துவ அலட்சியத்தால் முடிந்ததா?, ஊழலற்ற அரசாங்கத்தில் ஊழல் நிறைந்த சிகிச்சை முறையை கொடுக்கவேண்டாம்?, உயிரைக் காக்க வேண்டிய கைகள் உயிரை வாங்கலாமா? என்ற கோசங்கள் அடங்கிய பதாதைகளை தாங்கியபடி போராட் டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த போராட்டத்திற்கு வன்னி பாராளுமன்ற உறுப் பினர்களான துரைராசா ரவிகரன், செல்வம் அடைக்கல நாதன், பிரதேச சபை தவிசாளர், உறுப்பினர்கள், பொது மக்கள், பாடசாலை மாணவர்கள், பொது அமைப்புகள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டி ருந்தனர். இதன்போது வைத்தியசாலைப் பணிப் பாளர், பாராளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரிற்கான மகஜர் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களினால் கையளிக் கப்பட்டிருந்தது.

குறித்த போராட்டத்தின் பின்னர் முல்லைத்தீவு மக் களின் கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஜனாதிபதி செய லகத்திற்கும் அதன் பிரதிகள் சுகாதார அமைச்சர் கொழும்பு, செயலாளர் நாயகம், சுகாதாரப் பணிமனை கொழும்பு, வடமாகாண ஆளுநர் அலுவலகம், முல்லைத் தீவு மாவட்டச் செயலாளர் அலுவலகம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, முல்லைத்தீவு போன்றவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

குறித்த போராட்டத்தில் கலவரம் ஏற்பட்டாலும் என்ற நோக்கத்தில் கலகம் அடக்கும் பொலிஸாரும், பாதுகாப் புக் கடமையில் பொலிஸாரும் ஈடுபட்டிருந்தனர். (ம-7,299)

## ஜனநாயக...

ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்டு வரும் மூச்சுத் திட்டத்தின் கீழ், பொலநறுவை மாவட்டம், அர லகங்வில பிரதேச வைத்தியசாலைக்கு 28 இலட்சம் ரூபா மதிப்புள்ள வைத்தியசாலை உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இந்த அரசாங்கத் திற்கு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான தொலைநோக் குப் பார்வையும், திட்ட வரைபடமொன்று காணப்படுவதா கத் தெரியவில்லை.

இதைவிடுத்து அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைகளை இல்லாதொழிப்பதற்கு முயற்சித்து வரு கின்றது. ஜனநாயகத்துக்கான வெளியை சுருக்குவது அரசாங்கத்தின் பணியல்ல.

பாதிக்கப்பட்ட தாய்நாட்டிற்கு நிவாரணங்களைப் பெற் றுத் தரும், மக்களின் வாழ்க்கையை வலுப்படுத்தக் கூடிய புதிய பயணமொன்றை ஆரம்பிப்பது தேவையாகக் காணப் பட்டாலும், அரசாங்கத்தின் இதுவரையான நடவடிக்கை களைப் பார்க்கும்போது இதைக் கண்டுகொள்ள முடி யாதுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை அரசாங்கம் விரைவில் நடத்த வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து



(கொழும்பு)

இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மீண்டெழுவதற்கு இன்னும் போதுமான சர்வதேச உதவிகள் கிடைக்கப்பெறவில்லை. எனவே, சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை விரைவில் நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் தெரிவிக்கையில், "பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ள நிவாரணங்கள் விரைவில் வழங்கப்பட வேண்டும்.

முகாம்களில் உள்ள மக்களைப் பாதுகாப்பான இடங்களில் மீள குடியமர்த்துவதற்குரிய ஏற்பாடுகளும் இடம்பெற வேண்டும்.

பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு போதுமான உதவிகள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

இனியும் காலம் தாழ்த்தாது, சர்வதேச கொடையாளர் மாநாட்டை நடத்த வேண்டும். சர்வதேச சமூகத்தின் கவனம் எமது நாட்டுப் பக்கம் திரும்பியுள்ள நிலையில் கூடிய விரைவில் இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எனினும் இது தொடர்பில் அரசு அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை. அதேவேளை, சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன் வழங்குநர்களுடன் பேச்சு நடத்தி கடும் நிபந்தனைகளை தளர்த்திக் கொண்டு, புதிய ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்" என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# வாகன இறக்குமதியால் வரலாறு காணாத வருமானம்

(கொழும்பு)

இலங்கைச் சுங்கத் திணைக்களம் 2025 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 2,497 பில்லியன் ரூபாய் வருமானத்தைச் சேகரித்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

இது நிதி அமைச்சினால் நிர்ணயிக்கப்பட்ட வருமான இலக்கை விட அதிகமானது என்று சுங்க ஊடகப் பேச்சாளரும் பணிப்பாளருமான சந்தன புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

2025 ஆம் ஆண்டிற்காக நிதி அமைச்சு முதலில் 2,115 பில்லியன் ரூபாயை இலக்காக நிர்ணயித்திருந்தது.

இதன்படி நவம்பர் மாதத்திலேயே ஆரம்ப இலக்கை சுங்கம் எட்டியதால், அது 2,231 பில்லியன் ரூபாயாக அதிகரிக்கப்பட்டது.

இதனையடுத்து சுங்கத் திணைக்களம் தற்போது இந்தத் திருத்தப்பட்ட இலக்கையும் தாண்டி 2,497 பில்லியன் ரூபாயை ஈட்டியுள்ளது.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டமை இந்த அதிரடி வருமான உயர்விற்கு முதன்மைக் காரணமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுங்கத் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்பட்ட புதிய வரி வசூலிப்பு முறைகள் மற்றும் சீர்திருத்தங்கள் என்பனவும் வருமான உயர்விற்கு காரணமாக அமைந்துள்ளன. (நி)

# மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவை

(மன்னார்)

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் தேசிய நிகழ்ச்சித்திட்டமான கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விசேட நடமாடும் வேலைத்திட்டம் நேற்றைய தினம் திங்கட்கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மக்களுக்கு பல்வேறு சேவைகள் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களாக ஜெகதீஸ்வரன், திலகநாதன், மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் உள்ளடங்கலாக இராணுவ பொலிஸ் அதிகாரிகள், திணைக்கள தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (3-285)

# சட்டவிரோத பொருட்களுடன் இரு இந்தியர்கள் கைது

(கொழும்பு)

ஒன்றரைக் கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகள் மற்றும் நவீன ரக கையடக்கத் தொலைபேசிகளை சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வந்த இரண்டு வெளிநாட்டு பயணிகள் விமான நிலைய சுங்க அதி காரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 22 மற்றும் 23 வயதுடைய இந்தியாவைச் சேர்ந்த இளம் வர்த்தகர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 6 மணியளவில் டுபாயிலிருந்து எமிரேட்ஸ் விமான சேவைக்கு சொந்தமான EK-654 ரக விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இதன்போது அவர்கள் கொண்டு வந்த 6 பயணப் பொதிகளினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட "மென்செஸ்டர்" மற்றும் "பிளாட்டினம்" வகையைச் சேர்ந்த 84,000 சிகரெட்டுகள் அடங்கிய 420 கார்ட்டூன்களும், 25 நவீன ரக "அப்பிள்" கையடக்கத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

விமான நிலைய சுங்க அதிகாரிகள் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி)


## கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை (வ/து) பணிநிலை வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபையின் கீழ் வரும் பணிநிலைக்கான விண்ணப்பங்கள் வெளிவாரியாக கோரப்படுகின்றன.

**பதவி நிலை** : அலுவலக உதவியாளர்
**சம்பள குறியீட்டு இல** : 317/16
**சம்பள அளவுத்திட்டம்** : 31,975.00-390X10-490X10-650×10 -47,275.00

சுற்றுநிருபம் 02/2025(01)க்கு அமைவானது (இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கைப்படியான இதர படிகள் வழங்கப்படும்)

**தகைமைகள்**

அ.) கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ.) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்./08 ஆம் தர கல்விச் சான்றிதழ்.

**பொதுவான நிபந்தனைகள்**

1. வயதெல்லை 18-45 இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
2. கூட்டுறவுச் சங்கங்களில் கடமை புரிபவர்கள் குறித்த சங்கத்தினூடாக விண்ணப்பப்படிவம் அனுப்பப்பட வேண்டும்.
3. தங்களால் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ், மேலதிக கல்வித்தகைமைச் சான்றிதழ், மேலதிக துறைசார் சேவைச் சான்றிதழ், சமூக நலன் செயற்பாடுகளுடனான சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் நிழற்பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.
4. மேற்படி பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்க சட்ட திட்டங்களுக்கு அமைய உரிய பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை 16.01.2026 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுத்தபால் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ **"தலைவர், மாவட்ட கூட்டுறவு சபை A9 வீதி, டிப்போ சந்தி அருகாமை, கிளிநொச்சி."** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


**தலைவர்,**
**மாவட்ட கூட்டுறவு சபை,**
**கிளிநொச்சி.**

(C-4693)



# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 1936 . 01 . 08



உதிர்வு 2025 . 12 . 28

கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபரும், எமது இரசாயனவியல் ஆசிரியருமாகிய

அமரர். அப்பாத்துரை பஞ்சலிங்கம்

அவர்களின் இழப்பால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்: 86 ஆம் ஆண்டு அணி, மாணவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் துப்பாக்கிச் சூடு
# பிரதான சந்தேக நபர் உட்பட இருவர் கைது

(மன்னார்)

மன்னார் நீதிமன்ற வளாகத்திற்கு முன்பாக இருவர் சுட்டுக் கொல்லப் பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் உள்ளடங்கலாக இரண்டு சந்தேக நபர்களை பொலிஸார் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மன்னார் நீதிமன்றத் திற்கு முன்பாக கடந்த ஜனவரி (16.01.2025) அன்று இரண்டு நபர்கள் சுட்டுக் கொல்லப் பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

அதன்படி, கிடைத்த தகவலின் அடிப்படையில் மன்னார் பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவும் மன்னார் பிரிவு குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவும் இணைந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலை தேடுதல் நடவடிக்கையை மேற் கொண்டன.

இதன்போது மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள ஒரு விடுதியில் ஒரு கைக்குண்டுடன் மறைந் திருந்த மேற்படி குற்றத்தைத் திட்டமிட்ட பிரதான சந்தேக நபரும், அவருக்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்த ஒரு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டனர். சந்தேக நபர்கள் 22 மற்றும் 38 வயதுடைய உயிலங் குளத்தில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் மன்னார் மாவட்ட மக்கள் மத்தியில் பாரிய அச்சத்தை ஏற்படுத்தி இருந் தமையும் குறிப்பிடத்தக்கது. (3-285)

# தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தால் ஆசிரியர்களுக்கான ஆங்கில ஆய்வு மாநாடு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆங்கில ஆசிரியர் மாநாடு - 2025 நாளை புதன் கிழமை காலை 8மணி முதல் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் சி. கமலராஜன் மற்றும் ஆங்கிலம், வெளிநாட்டு மொழிகள் பிரிவின் இயக்குநரும், பிரதிக்கல்விப் பணிப்பாளருமான பி. என். சுதர்சன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற வுள்ள இந்த மாநாட்டின் முதன்மை உரையாளராக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ஆர்.சுரேந்திரகுமாரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இம் மாநாட்டில், ஆங்கில மொழி கற்பித்தலில் இலக்கியத்தின் பங்கு, ஏ2 மொழி கற்பித்தலில் டிஜிட்டல் கருவிகள், கலப்பு கற்றல் முறை, தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு, மாணவர் ஈடுபாடு மற்றும் ஊக்குவிப்பு போன்ற சமகால விடயங்களில் சிறப்புரைகள் இடம்பெறவுள்ளன.

ஆங்கில ஆசிரியர்களின் தொழில்முறைத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் இம் மாநாடு ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க தாகும். (3-33)


# திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையில் ஆண்டுதோறும் இடம்பெற்று வரும் திருவாசக முற்றோதல் நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 7 மணிக்கு இல.66, கல்லூரி வீதி நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆர்வலர்கள் மற்றும் ஓதுவார்களை கலந்து கொள்ளுமாறு சைவபரிபாலன சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (3)

# வடமாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவராக விவேகானந்தன் நியமிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்தி பணியகத்தின் தலைவராக, சுற்றுலா அபிவிருத்தி ஆலோசகராகப் பணியாற்றும் கலாநிதி ஜெகநாதன் விவேகானந்தன் வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகனால் நியமிக்கப்பட்டுள்ளார்.


இவருக்கான நியமனக் கடிதத்தை ஆளுநர் செயலகத்தில் வைத்து நேற்று திங்கட் கிழமை ஆளுநர் கையளித்தார். இந்த நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலனும் கலந்து கொண்டார்.(3)

# அலுவலக திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித் தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவுவழங்கலும் விநியோகமும், தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தகமும் வாணிபமும் அமைச்சின் அலுவலக திறப்பு விழா நாளை புதன்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்ப்பாணம், பிரதான வீதி, அடைப்பன் வீதியில் அமைந்துள்ள தொழிற்றுறைத் திணைக்களத்தின் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது.

வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் அதிதிகளாக கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் மற்றும் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி.தனுஜா முருகேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)



யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறையும் நல்லாயன் ஆன்மீக பணியகமும் இணைந்து முன்னெடுத்த கிறிஸ்மஸ் செப வழிபாடு கடந்த 22ஆம் திகதி திங்கட்கிழமை பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

துறைத்தலைவர் பேராசிரியர் அருட்தந்தை போல் றொகான் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கரோல் கீதங்கள், தியானம், உரை[illegible] என்பன இடம்பெற்றன.

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 850 | 900 | 900 | 800 | 650 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 220 | -- |
| பச்சைமிளகாய் | 1500 | 1300 | 800 | 1200 | 1100 |
| தக்காளி | 600 | 700 | 600 | 700 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 200 | 160 | 100 |
| கோவா | 350 | 300 | 400 | 400 | 270 |
| கரட் | 400 | 300 | 400 | 400 | 275 |
| பூசணி | 120 | 140 | 150 | 100 | 80 |
| புடோல் | 400 | 400 | 400 | 500 | 375 |
| வாழைக்காய் | 100 | 120 | 150 | 200 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 250-300 | 300 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 200 | 250 | 230 |
| பாகற்காய் | 1400 | 1000 | 1500 | 2000 | 800 |
| வெண்டக்காய் | 350 | 350 | 400 | 600 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 260 | 300 | 400 | 300 |
| பயற்றங்காய் | 700 | 700 | 650 | 500 | 400 |
| லீக்ஸ் | 350 | 330 | 400 | 400 | 275 |
| பீற்றூட் | 350 | 600 | 600 | 1000 | 600 |
| கறிமிளகாய் | 1400 | 1100 | 1000 | 1600 | 1500 |
| முருங்கைக்காய் | 1800 | -- | 2000 | -- | -- |
| போஞ்சி | 800 | 800 | 1000 | 800 | 600 |
| கத்தரிதம்புள்ள | 800 | 700 | 600 | 700 | -- |
| கீரை – 1 பிடி | 180 | 140-200 | 200 | 250 | 150 |
| தேசிக்காய் | 800 | 600 | 400 | 300 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 200 | 150 | 150-200 | 120 |
| இராசவள்ளி | 800 | 700 | 500 | 500 | 475 |
| வெங்காயப்பூ | 600 | 900 | 600 | 800 | -- |
| முள்ளங்கி | 300 | 250 | 400 | 300 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 200 | 80 | 50 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 100 | 100 |
| [illegible] | 100 | 150 | 150 | 150 | 50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைபெறும் 2025 மறக்க முடியாத நினைவுகள்

**ஜனவரி- 14**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சீனா பயணம். புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து.

**ஜனவரி- 16**

மன்னார் நீதிமன்றத்திற்கு முன்பாக துப்பாக்கிச்சூடு. இருவர் உயிரிழப்பு.

**ஜனவரி- 28**

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற் படை துப்பாக்கிச்சூடு. இருவர் படுகாயம்.

**ஜனவரி- 29**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜா காலமானார்.

**ஜனவரி - 24**

யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம் எனப் பெயர் மாற்றப்பட்டது.

**ஜனவரி - 25**

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் மகன் யோசித பண மோசடி வழக்கில் கைது.

**ஜனவரி - 28**

பிரித்தானிய அமைச்சர் யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரைச் சந்தித்தார்.

**ஜனவரி - 31**

ஜனாதிபதி அநுர யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டம் மற்றும் எதிர்கால திட்டங்கள் தொடர்பில் கலந்துரை யாடுவதற்காக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்குபற்றினார்.

**பெப்ரவரி - 09**

நாடு முழுவதும் 8 மணி நேரம் மின்வெட்டு.

**பெப்ரவரி - 12**

ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின் அரசியல் அலுவலர் தலைமையிலான குழுவினர் யாழ். பல்கலைக்கழகத்திற்கு விஜயம்.

**பெப்ரவரி - 19**

பாதாள குழுத் தலைவர் கணேமுல்ல சஞ்சீவ கொழும்பு புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

**பெப்ரவரி - 28**

ஜனாதிபதி அலுவலகத்திற்கு சொந்தமான 14 சொகுசு வாகனங்கள் ஏலத்திற்கு விடப்பட்டன.

**மார்ச் - 14**

பட்டலந்த வதை முகாம் அறிக்கை அமைச்சர் பிமல் ரத்னாயக்கவினால் பாராளுமன்றத்தினால் சமர்ப்பிப்பு.

**மார்ச் - 21**

அநுர அரசின் கன்னி பட்ஜட் 3 இல் 2 பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

**ஏப்ரல் - 04**

**இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டார்.**



**ஏப்ரல் - 08**

இந்தியாவின் தர்மபுர ஆதீன குரு மகாசன்னிதானம் மாசிலாமணி தேசிக ஞான சம்பந்தபரமாச்சாரிய சுவாமிகள் யாழ். மாவிட்டபுர கந்தசுவாமி ஆலய மகாகும்பாபிஷேகத்திற்கு வருகை தந்தார்.

**ஏப்ரல் - 08**

பிள்ளையான் என அழைக்கப்படும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் சி.ஐ.டியால் கைது செய்யப்பட்டார்.

**ஏப்ரல் - 10**

பலாலி வீதி முழுமையாக விடுவிக்கப்பட்டது.

**மே - 01**

நல்லை ஆதீன குரு முதல்வர் தேகவியோகம் அடைந்தார்.

**மே- 06**

உள்ளூராட்சி தேர்தல் நடைபெற்றது.

**மே- 07**

உலக வங்கியின் தலைவர் அஜய்பங்கா இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார்.

**மே- 11**

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி பொலநறு வையில் விபத்து. 6 விமானப் படைவீரர்கள் பலி.

**மே- 11**

"தமிழின அழிப்பு" நினைவுத் தூபி கனடாவில் திறப்பு. பிரண்டன் மேயர் பட்ரிக் பிரவுண் திறந்து வைத்தார்.

**மே - 11**

நுவரெலியா கொத்மலைப் பகுதியில் 350 அடிபள்ளத்தில் பாய்ந்த பேருந்து 22பேர் பலி.

**மே - 12**

முதல் மாவீரர் சங்கரின் தந்தை செல்வச்சந்திரன் காலமானார்.

**மே - 12**

வடக்கு மாகாண பழுதூக்கல் போட்டி. யாழ் மாவட்டம் சம்பியன்

**மே - 13**

நயினாதீவு படகுப் பாதை நீரில் மூழ்கியது.

**மே - 15**

இலங்கை வரலாற்றில் முதல் பெண் பரீட்சை ஆணையாளராக இந்திகா குமாரி லியனகே நியமிக்கப்பட்டார்.

**மே - 20**

யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதி மன்னன் 2 ஆம் சங்கிலிய மன்னனின் 406 ஆவது நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டது.

**மே - 20**

வடக்கு மாகாண பிரதம செயலாளராக திருமதி தனுஜா முருகேசு நியமிக்கப் பட்டார்.

**மே - 20**

நல்லூர் ஆலய வளாகத்தில் அசைவ உணவகம் திறப்பதற்கு எதிராக இந்து அமைப்புக்கள் போராட்டம்.

**மே - 22**

நல்லூரில் அசைவ உணவகத்திற்கு எதிராக தடைவிதித்தது யாழ். மாநகரசபை.

**மே - 25**

அம்பாறை உகந்தைமலை முருகன் ஆலயச் சூழலில் புத்தர் சிலை அமைப்பு.

**மே - 26**

ஓமந்தையில் கார் விபத்து. யாழ். இந்தியத் துணை தூதரக அதிகாரி பிரபாகர சர்மா உயிரிழப்பு.

**மே - 26**

ஒரே பிரசவத்தில் 5 குழந்தைகள். யாழ். போதனாவில் சம்பவம்.

**மே - 29**

ஊழல் குற்றச் சாட்டில் முன்னாள் அமைச்சர்களான மகிந்தானந்த அளுத்கமகேவிற்கு 20 ஆண்டுகள், நளின் பர்னாண்டோவுக்கு 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது கொழும்பு நீதிமன்றம்.

**மே - 29**

உள்ளூராட்சி மன்ற ஆட்சி அமைப்புத் தொடர்பில் தமிழரசுக் கட்சி - தமிழ் தேசிய மக்கள் முன்னணி கொக்குவில் பொக்ஸ் கோட்டலில் சந்தித்து கலந்துரையாடினர்.

**ஜூன் - 01**

யாழ். மாநகர சபையில் முதல் முஸ்லிம் பெண் பிரதிநிதியாக பார்த்திமா றிஸ்லா நியமிக்கப்பட்டார்.

**ஜூன் - 02**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி- ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து.

**ஜூன் - 03**

ஐ.பி.எல் -பெங்களூர் சம்பியன்.

**ஜூன் - 12**


குஜராத் அகமதாபாத்தில் விமான விபத்து. 240 பேர் பலி.

**ஜூன் - 13**

யாழ். மாநகர சபை முதல்வராக திருமதி. மதிவதனி விவேகானந்தராஜா தெரிவு செய்யப்பட்டார்.

**ஜூன் - 25**

**ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர்டர்க் யாழ்ப்பாணம் செம்மணிக்கு விஜயம் மேற்கொண்டார்.**




(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# ஜேர்மன், பிரான்ஸ் ஜனாதிபதிகள் இந்தியாவிற்கு விஜயம்



(புதுடில்லி)

உறவுகளை வலுப்படுத்தும் வகையில் வரும் புத்தாண்டில் ஜேர்மனி, பிரான்ஸ் ஜனாதிபதிகள் இந்தியாவிற்கு வருகைதர உள்ளனர்.

இது குறித்து கூறப்படுவதாவது: ஜேர்மனி ஐரோப்பிய யூனியனில் வலுவான பொருளாதாரத்தை கொண்ட நாடாகவும், உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக விளங்கி வருகிறது.

தொடர்ந்து இந்தியா ஐரோப்பா உடன் பெரிய அளவிலான உறவு மேம்பாட்டை தொடங்க உள்ளது.

இதன் தொடக்கமாக வரும் புத்தாண்டில் ஜனவரி மாதத்தில் நாட்டில் நடைபெற உள்ள குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக ஐரோப்பிய ஆணைய தலைவர் உர்சுலா வான் டெர் லேயன் மற்றும் ஐரோப்பிய சபைத் தலைவர் அன்டோனியா கோஸ்டா கலந்துகொள்ள உள்ளனர். மறுநாள் 27ஆம் திகதி புதுடில்லியில் நடைபெற உள்ள இந்தியா - ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாட்டிலும் பங்கேற்க உள்ளனர்.

இவர்களைத் தொடர்ந்து ஜேர்மனி ஜனாதிபதி பிரெட்ரிக் மெர்ஸ் ஜனவரியில் இந்தியாவுக்கு வருகை தர வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறது.


மேலும் பெப்ரவரி இல் இந்தியா நடத்த உள்ள செயற்கை நுண்ணறிவு (AI டெக்னாலஜி) மாநாட்டிலும் பங்கேற்பதற்காக, பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் வருகை தர உள்ளதாக கூறப்படுகிறது. (நி)

# ரஷ்யா - உக்ரைன்

# பேச்சுவார்த்தையில்

## ட்ரம்ப்- ஜெலெ

## கூட்டாகத் தெரி



**(வோஷிங்டன்)**

**புளோரிடா பேச்சுவார்த்தை ரஷ்யாவுடனான போரை முடிவு வருவதில் முன்னேற்றம் ஏற்பட ஜனாதிபதி டொனால்ட் ட்ரம் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெ தெரிவித்தனர்.**

அதே நேரத்தில் சர்ச்சைக்குரிய டான்பாஸ் பிராந்தியத்தின் தலைவிதி, தீர்க்கப்படாத ஒரு முக்கிய பிரச்சினையாகவே உள்ளது என்பதை ஒப்புக் கொண்டார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் புளோரிடாவில் உள்ள ட்ரம்பின் மார்-எ-லாகோ ரிசார்ட்டில் சந்தித்த பின்னர், இரு தலைவர்களும் கூட்டுச் செய்தியாளர் சந்திப்பில் பேசினர்.


அமைதிப் பேச்சுவார்த்தையில் மிகவும் சர்ச்சைக்குரிய விடயங்களான உக்ரைனுக்கான பாதுகாப்பு உத்தர வாதங்கள் மற்றும் ரஷ்யா கைப்பற்ற முயன்ற கிழக்கு உக்ரைனின் டான்பாஸ் பகுதியைப் பிரித்தல் போன்ற இரண்டு விட யங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக இரு தலைவர்களும் தெரிவித்தனர்.

இதன்போது, போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறுமா என்பது சில வாரங்களில் தெளிவாகத் தெரியும் என்று ட்ரம்ப் தெரிவித்தார்.

எனினும், இரு தலைவர்களும் அது தொடர்பான

# அமெரிக்காவில் கடும் பனிப்புயல் 1500 விமான சேவைகள் இரத்து

## நியூயோர்க்கில் அவசரநிலை பிரகடனம்




(வோஷிங்டன்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் ஏற்பட்டுள்ள கடும் குளிர்கால பனிப்புயலினால் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை நியூயோர்க் நகரில் சுமார் 4 அடி உயரத்துக்கு பனி பொழிந்துள்ளது.

வெள்ளிக் கிழமை இரவு முதல் இதுவரை 1,500 இற்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் தாமதமாகியுள்ளதாகவும் விமான கண்காணிப்பு நிறுவனம் ஃப்ளைட் அவேர் தெரிவித்துள்ளது.

ஜோன் எப். கென்னடி, நியூவர்க் லிபர்டி, லாகார்டியா விமான நிலையங்கள் சமூக ஊடகங்களில் பனி எச்சரிக்கை அறிவிப்புகளை வெளியிட்டு, மேலும் விமான சேவை பாதிப்புகள் ஏற்படலாம் என எச்சரித்துள்ளன.


நியுயோர்க் மற்றும் நியூ ஜெர்சி மாநிலங்களில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு நியூயோர்க் நகரில் கடைசியாக கடும் பனிப்பொழிவு ஏற்பட்டது.

அப்போது சென்ட்ரல் பார்க் பகுதியில் 8 அடி உயரத்துக்கு பனி பொழிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# உறைய

## கடும் குளி



(ஒட்டாவா)

50 ஆண்டுகளுக்குப் பின்னர் உறைய வைக்கும் கடும் குளிரால் கனடா பாதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு



# போர் நிறுத்த
# முன்னேற்றம்
## லென்ஸ்கி
## ரிவிப்பு




**தையின் போது வுக்குக் கொண்டு டதாக அமெரிக்க ம்பும் உக்ரைன் ஜெலென்ஸ்கியும்**

மேலதிக விபரங்களையோ, ஒரு சமாதான ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கான காலக்கெடுவையோ செய்தியாளர் சந்திப்பின் போது வழங்கவில்லை.

மார்-எ-லாகோவில் செய்தியாளர்களிடம் பேசிய ஜெலென்ஸ்கி, ரஷ்யாவுடான போரில் 20 அம்ச அமைதித் திட்டத்தில் "90%" குறித்து ஒரு உடன்பாட்டிற்கு வந்ததாகத் தெரிவித்தார்.

உக்ரைனில் ரஷ்யாவின் கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகால போரை முடிவுக்குக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்ட பிரச்சினைகள் குறித்து மேலும் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்க மற்றும் உக்ரைன் குழுக்கள் அடுத்த வாரம் சந்திக்கும் என்றும் ஜெலென்ஸ்கி தெரிவித்தார். (நி)

# தாய்வானைச் சுற்றி இராணுவ பயிற்சிகளை நடத்த திட்டமிடும் சீனா



(பீஜிங்)

பிரிவினைவாத சக்திகளுக்கு எதிரான எச்சரிக்கையாக, நாட்டின் முக்கிய பகுதிகளைக் கைப்பற்றி முற்றுகையிடுவதைப் போல, தாய்வானைச் சுற்றி இராணுவப் பயிற்சிகளை நடத்தப் போவதாக சீனா அறிவித்துள்ளது.

திட்டமிடப்பட்ட பயிற்சிகளுக்கு இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் ரொக்கெட் படை அனுப்பப்படும்.

இதில் நேரடி துப்பாக்கிச் சூடு பயிற்சிகள் அடங்கும் என்றும் சீன இராணுவம் தெரிவித்துள்ளது.

"Justice Mission 2025" என்ற பெயரில், அமெரிக்கா தனது மிகப் பெரிய ஆயுதப் பொதிகளில் ஒன்றை தாய்வானுக்கு $11 பில்லியன் (£8.2 பில்லியன்) பெறுமதியாக விற்பனை செய்வதாக அறிவித்த சில நாட்களுக்குப் பின்னர் இந்தப் பயிற்சிகள் நடைபெறுகின்றன.

இந்த நடவடிக்கைக்கு பீஜிங் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்ததுடன், அமெரிக்க பாதுகாப்பு நிறுவனங்களுக்கு தடை விதித்தது.

இந்த ஆண்டு தனது பாதுகாப்பை அதிகரிக்கும் தாய்வானின் முயற்சி, சுயராஜ்ய தீவை தனது பிரதேசமாகக் கூறும் பீஜிங்கையும் கோபப்படுத்தியுள்ளது.


இந்த நிலையில் தாய்வானின் ஜனாதிபதி அலுவலகம் வரவிருக்கும் சீனப் பயிற்சிகளை விமர்சித்துள்ளது.

அவை சர்வதேச விதிமுறைகளுக்கு எதிரான சவால் என்று கூறியுள்ளது.

நேற்றுக் காலை தாய்வானைச் சுற்றி சீன விமானங்கள் மற்றும் கப்பல்களைக் கண்டறிந்ததாகவும், நிலைமையைக் கண்காணிக்க தங்கள் சொந்தப் படைகளையும் ஏவுகணை அமைப்புகளையும் நிலை நிறுத்தியதாகவும் தாய்வானின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு முதல் பீஜிங் தாய்வான் நீரிணையில் இராணுவப் பயிற்சிகளை அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# வைக்கும்
## ரிரில் கனடா



டுள்ளன.

தற்போது வட அமெரிக்க கண்டம் இருவேறு தீவிர வானிலை நிலைகளை எதிர்கொண்டு வருகிறது.

ஒருபுறம் கனடா உறையவைக்கும் கடும் குளிரிலும், மறுபுறம் அமெரிக்காவின் பல பகுதிகள் வசந்த காலத்தைப் போன்ற வெப்பத்திலும் காணப்படுகின்றன.

வடக்கு கனடாவில் கடந்த சில வாரங்களாக வெப்பநிலை -20°C முதல் -40°C வரை நீடித்து வருகிறது.

பிரேபர்ன் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை -55.7°C வெப்ப நிலை பதிவானது. இது 1975 ஆம் ஆண்டிற்குப் பிறகு அங்கு பதிவான மிகக் குறைந்த டிசம்பர் கால வெப்ப நிலையாகும்.

மாயோ மற்றும் டாவ்ஸன் பகுதிகளில் தொடர்ந்து 16 இரவுகள் வெப்பநிலை -40°C இற்கு கீழேயே இருந்தது.

இந்த கடும் குளிர் தெற்குப் பகுதிகளுக்கும் பரவியுள்ளது.

கிறிஸ்மஸ் மற்றும் அதைத் தொடர்ந்த நாட்களில் எட்மன்டன், மாண்ட்ரியல் மற்றும் ஒட்டாவா போன்ற நகரங்களில் வெப்பநிலை -20°C முதல் -28°C வரை சரிந்தது.

வரலாறு காணாத எரிசக்தி தேவையால் யூகோன் பகுதியில் மின்சாரத் தடை ஏற்படக்கூடும் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

கனடா குளிரில் நடுங்கிக் கொண்டிருக்கும் வேளையில், அமெரிக்காவின் பல மாநிலங்களில் இதுவரை இல்லாத அளவிற்கு வெப்பமான கிறிஸ்மஸ் தினம் பதிவாகியுள்ளது. (நி)

# மெக்சிகோவில் தடம்புரண்டது ரயில்!




(மெக்சிகோ சிட்டி)

மெக்சிகோவின் தெற்கு மாநிலமான ஓக்ஸாக்காவில் 250 பேரை ஏற்றிச் சென்ற இன்டர் ஓசியானிக் ரயில் தடம் புரண்டு, விபத்துக்குள்ளானதில் குறைந்தது 13 பேர் உயிரிழந்ததாகவும் 100இற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் அதிகாரிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தனர்.

நிசாண்டா நகருக்கு அருகே தடம் புரண்ட ரயில் பயணத்தின் போது, ஒன்பது பணியாளர்கள் மற்றும் 241 பயணிகளை ஏற்றிச் சென்றதாக மெக்சிகன் கடற்படை குறிப்பிட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
# பொது அறிவித்தல் - 2026

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் தொழில் முயற்சியை மேற்கொள்வோர், தொழில் நிறுவனங்கள் ஏனைய அமைப்புக்கள் அனைத்தும் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கீழ்வரும் நடைமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பில் எமது பிரதேச சபையின் **தலைமை அலுவலகம்** மற்றும் **அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய்** ஆகிய உப அலுவலகங்களிலும் அலுவலக நாட்களில் மேலதிக விபரங்களையும் சேவையையும் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு:-**

**1. பிரதேச சபையினால் அறவிடப்படுகின்ற கட்டணங்கள் தொடர்பில் பிரதேச சபையினால் 2024.12.27ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்கமைவாகக் கட்டணங்கள் அறவிடப்படும்.**

**2. இந்நடைமுறைகளை பின்பற்றத் தவறுவோர் மீது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளிற்கிணங்க சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்**

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | |
|---|---|---|---|
| 01 | ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல் | ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்யப்படாத ஆதன உரிமையாளர்கள் | காணி உரிமையினை மாற்றிப் பெற்றுக் கொண்டவர்கள் உடனடியாகவே பிரதேச சபையின் உரிய அச்சுவேலி, நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய் ஆகிய உப அலுவலகங்களில் விண்ணப்பப் படிவத்தினை பெற்று தேவையான உறுதிகளின் பிரதியுடன், நில அளவைப்படம், தோம்பு, மற்றும் தேவையான ஆவணங்களுடன் சட்டத்தரணி ஒருவரினால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணபத்தினையும் வழங்குவதன் மூலம் ஆதனப் பெயர் பதிவேட்டில் பெயர் மாற்றத்தினை செய்து கொள்ள முடியும். |
| 02 | ஆதன வரி செலுத்துதல் | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள் | எமது சபையின் கீழ் அச்சுவேலி ,நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய் ஆகிய உப அலுவலகங்களில் ஆதனவரி அறவீடு நடைமுறையிலுள்ளது. எனவே குறித்த நான்கு உப அலுவலக எல்லைக்குள் வசிப்பவர்கள் ஆதன வரியினை செலுத்தி சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் 1987ம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1) இன் பிரகாரம் இக் காலங்களில் குறிப்பிட்ட விகிதத்தின் தொகையினை வலிகாமம் கிழக்கு பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தும்படி இத்தால் தங்களிடம் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. பிரிவு 134(7) இற்கமைய இவ் ஆதன வரியானது அதே நிதியாண்டின் ஜனவரி மாதம் 31 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ஆண்டு வரியை முழுமையாகச் செலுத்தப்பட்டால். அத்தகைய வரித்தொகையின் 10% கழிவு சலுகை வழங்கப்படும். மேலும் 01 ஆம் 02 ஆம் 03 ஆம் 04 ஆம் கந்தாயங்களுக்குரிய ஆதன வரித் தொகையினை அந்தக் காலப்பகுதியின் முதலாவது மாதத்திற்குள் செலுத்தப்பட்டால். குறிப்பிட்ட கந்தாயத்திற்கும் மிகுதியாகவுள்ள கந்தாயங்களுக்கும் ஆதனவரியின் தவணைப் பணத்தொகையின் 5% கழிவீடானது வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் ஆதன வரியானது செலுத்தப்படாதவிடத்து. அக்காலாண்டுக்குரிய ஆதனவரியின் 20% தண்டமாக ஆதனவரியுடன் சேர்த்து அறவிடப்படும். இவ்வாறு செலுத்தத் தவறினால். செலவுகளை அறவிடுவதற்கு இப் பிரதேச சபையினால் ஒரு எழுத்தாணை வழங்கப்படும். பிரிவு161 அ (II) இன் பிரகாரம் வெறுங்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% இலும் பிரிவு 161ஆ(III) இன் பிரகாரம் வெற்று நிலங்களும், வதிவிட வளவுகளும் தவிர்ந்த ஏனைய ஆதனங்களின் மீது 20% இலும் எழுத்தாணைக்குரிய செலவும் விதிக்கப்படும். |
| 03 | **வியாபார உரிமம்/வியாபார வரி** | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம்/தொழில் நிலையத்தவர்கள் | இப் பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர் 2026 ஆம் ஆண்டிற்கான வியாபார உரிமம்/ வியாபார வரி என்பவற்றை உப அலுவலகங்களில் 2025.03.31 ஆந் திகதிக்குப் பிந்தாமல் உரிய கட்டணத்தை செலுத்திப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 2025. 03.31 ஆந் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களை செலுத்நத்தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 04 | **மரக்கறி, மீன், இறைச்சி விற்பனை தடைசெய்தல்.** | பிரதேச சபையின் எல்லைக்குள் மீன், இறைச்சி, மரக்கறி வியாபாரம் செய்வோர். | சபையின் பொதுச் சந்தைகள், மீன்சந்தைகள் மற்றும் இறைச்சிக்கடைகள் அமைந்துள்ள பிரதேசத்திலிருந்து 500 மீற்றர் (½Km) சுற்றுவட்டத்தினுள் மரக்கறி, மீன்வகைகள், கோழி இறைச்சி, பழவகைகள் என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறிச்செயற்பட்டால் சட்டத்தை மீறியதாக கருதி நடவடிக்கை எடுக்கப்படும். |
| 05 | **சூழல் பாதுகாப்பு உரிமம்** | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம்/தொழில் நிலையத்தவர்கள் | 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் 2264/18 ஆம் இலக்க 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27ஆம் திகதி வியாழக்கிழமை வெளியிடப்பட்ட இலங்கை சனநாயகக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகைக்கு அமைவாக அ. ஆ. இ. இல் உள்ளடக்கப்பட்டுள்ள வியாபார/ கைத்தொழில் நிலையங் கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பாகம் (ஈ) இல் உள்ளடக்கப்பட்டுள்ள 39 விடயங்களிற்கும் சபையி னால் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கக் கூடியதாக வுள்ளது. இவற்றுள் தேங்காய் எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள், அரைக்கும் ஆலைகள், உணவு உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள், வெதுப்பகங்கள், கோழிப்பண்ணைகள், கொங்கறீட் முன்வார்ப்பு கைத் தொழில்கள், மரக்கட்டை அடிப்படையிலான கைத்தொழில் கள், தச்சு வேலைத் தளங்கள், வாகன பராமரிப்பு இடங் கள் தவிர்ந்த கொள்கலன் சாலைகள் போன்ற விடயங்களிற்கு தற்போது சபையினால் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்றது. |
| 06 | 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம்/ பிரசட்டத்தின் கீழ் கட்டடங்களை அமைப்பதற்கான அனுமதி வழங்கல் | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொது மக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள். | 1. பிரதேச சபையில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே தாங்கள் ஆதனத்தில் கட்டடங்கள், எல்லைச் சுவர்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசல கூடங்கள், குழாய்க் கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகளை மேற்கொள்ளல் வேண்டும். தவறின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப் படும்.<br>2. கட்டட நிர்மாண அனுமதி பெற்றவர்கள் அனுமதி கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து 01 வருட காலப் பகுதியினுள் கட்டட நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்து உரிய கட்டணத்தினை செலுத்தி குடிபுகுச் சான்றிதழ் அல்லது அமைவுச் சான்றிதழினை பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும். 01 வருட காலப் பகுதியினுள் வேலைகள் பூர்த்தி செய்யப்படாதவிடத்து உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியை [illegible] மீளவும் புதுப்பித்துக் கொள்ளுதல் வேண்டும். |
| 07 | காணி உப பிரிவிடுகை | ஆதன உரிமையாளர்கள் | 3. ஆதனம் ஒன்று உரிமையாளரது அபிவிருத்தி தேவைக்காகவோ விற்பனை செய்வதற்காகவோ இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட துண்டுக ளாகப் பிரிவிடல் செய்யப்படுவதற்கு முன்னர் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து உபபிரிவிடல் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். அனுமதி பெறப்படாது உபபிரிவிடல் செய்ப்படும் ஆதனங்களுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் விதிமுறைகளுக்கு அமைவாக தண்டப்பணம் அறவிடப்படும். |
| 08 | காணி ஒருங்கிணைத்தல் | ஆதன உரிமையாளர்கள் | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆதனங்கள் ஒன்றி ணைக்கப்படுவதாயின் உரிய ஆவணங்களை சமர்ப் பித்து ஒன்றிணைத்தல் அனுமதி பெறப்பட்ட பின்னரே அபிவிருத்தி நடவடிக்கைக்காக பயன்படுத்திக்கொள்ள முடியும். |
| 09 | படவரைஞராக பதிவு செய்தல்/புதுப்பித்தல் | படவரைஞர்கள் | 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 47 தொடக்கம் 59 வரையானதுடன் மற்றும் 1978 ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் புதிய திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஆணை/ ஒழுங்கு விதி நடைமுறைக்கமைவாக 2025.12.03 ஆந் திகதிய பத்திரிகை விளம்பரத்திற்கமைய வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் 2025 ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆந் திகதிக்கு முன்னர் எமது சபை எல்லைக்குள் படவரைஞராக சேவைகளை வழங்க விரும்பியவர்கள் எமது தலைமை அலுவலகத்தில் பதிவினை மேற்கொண் டிருத்தல் அல்லது புதுப்பித்து இருத்தல் வேண்டும். அவ்வாறு பதிவு செய்யாதோரினால் அல்லது புதுப்பிக்காதோரினால் வரையப்படும் படங்கள் சபையால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கல்வித் தகைமை NVQ - 5 in Drafting Technology (Building) இருத்தல் வேண்டும். |
| 10 | **துவிச்சக்கர வண்டி உரிமம் மற்றும் மிருகவரி உரிமம்** | துவிச்சக்கர வண்டி உரிமையாளர்கள் மற்றும் வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் | 2026 ம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டி உரிமம் மற்றும் மிருகவரி உரிமம் (நாய்களுக்கானது) என்பன 31.03.2026 ஆம் திகதிக்கு முன்னர் உப அலுவலகங் களில் உரிய கட்டணங்களை செலுத்திப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தவறின் உரிய தரப்பினர் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 11 | **விளம்பரங்களை அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல்** | விளம்பரங்களை காட்சிப்படுத்தும் முகவர்கள்.வர்த்தக நிலைய உரிமையாளர்கள் | 1987ஆம் அண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 126(vii) (xxx) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு உருவாக்கப்பட்ட 1952/16 ஆம் இலக்க 2016ஆம் ஆண்டு மாசி மாதம் 02ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட நியமத்துணை விதியின் பிரகாரம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை எல்லைக்குள் விளம்பரங்களை நிறுவும் அல்லது காட்சிப்படுத்தும் விளம்பர நிறுவனங்கள் அல்லது வேறு நபர்களை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்பு செய்தல், கட்டுப்படுத்தல் பிரதேச சபையால் மேற் கொள்ளப்படும்.<br>அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் சகல விளம்பரங்கள் ஆகியவற்றிற்கான கட்டணத்தை 2026.03.31 ஆம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் அனுமதியை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ் விடயம் உரிய விளம்பரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வர்த்தக நிறுவன உரிமையாளர்களது பொறுப்பாகும். அத்துடன் உரிய அனுமதி பெறப்படாது காணப்படுகின்ற சகல விளம்பரங்களும் வேறு எந்த அறிவித்தலுமின்றி உரிய இடத்திலிருந்து 2026.03.31 ஆந் திகதிக்குப் பின்னர் உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை சபையினால் மேற்கொள்ள ப்படும். இவ் விடயம் தொடர்பில் மேன்முறையீடுகள் எவையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. |
| 12 | **திண்மக் கழிவுகள் தொடர்பாக குடியிருப்பாளர்கள்,வியாபார நிலையங்கள் கடைப்பிடிக்க வேண்டியவை.** | பிரதேச சபை எல்லைக்குள் வதியும் குடியிருப்பாளர்கள், வியாபார நிலைய உரிமையாளர்கள், அரச,தனியார் நிறுவனங்கள். | 1. ஆதன உரிமையாளர்கள் தமது ஆதனத்தில் நுளம்பு பெருகுவதற்கேதுவான சூழலை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். கழிவுப் பொருட் களை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இடங்க ளில் அனுமதியின்றி கொட்டுதல் மற்றும் கொண்டு செல்லுதல் ஆகியவை பொதுச் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது.<br>2. தாங்கள் வீடுகளில் சேரும் மேலதிக திண்மக்க ழிவுகளை உரிய முறையில் தரம் பிரித்து ஒலிபெருக்கியவாறு தாங்கள் வீதிகளிற்கு வருகை தரும் பிரதேச சபையின் கழிவகற்றல் வாகனத்தில் அதற்கான கட்டணத்தினை அவ்விடத்தில் செலுத்தி கழிவுகளை அகற்றி கொள்ள முடியும். அதற்கான உபபற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.<br>3. அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள், உணவகங்கள், ஏனைய தொழில்முறை நிறுவனங்கள், முடி திருத்தும் நிலையங்கள் என்பன தங்கள் தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை உரிய கழிவகற்றல் கட்டணங்களை மாதாந்த அடிப்படையில் அல்லது தடவைகளிற்கான அடிப்படையில் உபஅலுவலகங்களில் செலுத்தி அப்பற்றுச் சீட்டினை காண்பித்து கிரமமான முறையில் கழிவகற்றல் சேவையினை பெற்றுக்கொள்ள முடியும். சபையினது குறித்த கழிவகற்றல் முறைக்கு ஒத்துழைக்காது கழிவகற்றலினை மேற்கொள்வோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>4. சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும், வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங் களிலும் கழிவுப் பொருட்களை போடுதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. மீறிச் செயற்படுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>5. பொது இடங்களில், வீதிகளில் கழிவுகளை கொட்டு வோரை கண்காணிப்பதற்காக எமது சபை ஊழியர்கள் இரவு, பகலாக கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். அவர்களினால் அவ்வாறு இனம் காணப்படுவோர் மீது உரிய சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 13 | **முச்சக்கர வண்டி தரிப்பிடம்** | பிரதேச சபை எல்லைக்குள் முச்சக்கர வண்டி தரிப்பிடங்களிலிருந்து முச்சக்கர வண்டி சேவை வழங்குவோர். | 1987ம் ஆண்டின் 15வது இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1), 126 மற்றும் மாகாண சபையினால் 2016.02.02 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1952/16 ஆம் இலக்க இலங்கை சனநாயகக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நியமத் துணைவிதிகளின் அத்தியாயம் 04 பிரிவு 11 இன் பிரகாரம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை எல்லைக்குள் காணப்படும் முச்சக்கர வண்டி தரிப்பிடங்களை முறைப்ப டுத்தல், ஒழுங்குபடுத்தல், கண்காணிப்பு செய்தல், கட்டுப் படுத்தல் பிரதேச சபையால் மேற்கொள்ளப்படும் என்பதுடன் அவ்வாறு சபையின் கீழ் உள்ள தரிப்பிடங் களில் மட்டுமே முச்சக்கர வண்டியை நிறுத்தி சேவை யிலீடுபட முடியும் என்பதோடு குறித்த தரிப்பிடத்திற்கு வருடாந்த கட்டணமாக ரூபா1000/= இனை அப் பிரதேசத்திற்குரிய எமது உப அலுவலகங்களில் செலுத்தி பற்றுச்சீட்டினை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து தரிப்பிடங்களிலிருந்து சேவை யில் ஈடுபட முடியாது என்பதுடன் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 14 | வீதி ஓரங்களில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குதல் தொடர்பாக | வீதி ஓரங்களில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குவோர் | சபைக்கு சொந்தமான வீதிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம் ஆகிய திணைக்களங்களின் பரிபாலனத்திற்குட்பட்ட வீதிகளில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குகின்ற சபைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பிரதேச சபையில் முறைப்படி அனுமதியினைப் பெற்ற பின்பே தமது சேவையை ஆரம்பித்தல் வேண்டும். |

(11 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உச்சத்தை எட்டியுள்ள
## சுற்றுலாப் பயணிகளின் வருகை

(கொழும்பு)

ஓர் ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்த அதிகூடிய சுற்றுலாப் பயணிகளின் சாதனை நேற்று முறியடிக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2,333,797 ஆக உயர்ந்துள்ளது. இது இலங்கை சுற்றுலா வரலாற்றில் ஒரு வருடத்தில் பதிவான அதிகபட்ச வருகையாகும்.

இலங்கை வரலாற்றில் இதற்கு முன்னர் அதிகூடிய சுற்றுலாப் பயணிகள் வருகை தந்த ஆண்டான 2018இல் பதிவாகியிருந்த, 23 இலட்சத்து 33 ஆயிரத்து 796 சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சாதனை நேற்று முறியடிக்கப்பட்டு இந்தச் சாதனை நிலை நாட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2025ஆம் ஆண்டின் 23 இலட்சத்து 33ஆயிரத்து 797 ஆவது சுற்றுலாப் பயணிகள் நேற்றுக் காலை வரவேற்கப்பட்டதாக இலங்கை சுற்றுலாச் சபை தெரிவித்துள்ளது.

"டித்வா" புயல் அனர்த்தம் போன்ற சவால்களுக்கு மத்தியிலும் இந்த இலக்கை எட்டியமையானது இத்துறை மற்றும் அதன் பங்குதாரர்களின் பலத்தையும் ஒற்றுமையையும் பிரதிபலிக்கிறது என இலங்கை சுற்றுலாச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

(10 ஆம் பக்கம் தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| 15 | **நீர் வழங்கல் சேவை, உழவு இயந்திர சேவை.** | நீர்,உழவு இயந்திர சேவை தேவைப்படுவோர் | 1. **நீர்வழங்கல் சேவை** பொதுமக்கள் தங்கள் வீட்டின் விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைக்கு பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டு கட்டணம் செலுத்துவதன் மூலம் குடிநீரையும், வாடகைக்கு தண்ணீர் தாங்கியினையும் பெற்றுக்கொள்ள முடியும். 2. **உழவு இயந்திர சேவை** உழவு இயந்திர சேவையைப் பெறுவதற்கு தலைமைக் காரியாலயத்தில் குறித்த சேவைக்கான கட்டணங்களை செலுத்தி சேவைகளை பெற்றுக்கொள்ளலாம். |
| 16 | **பொது சுகாதாரம் பேணல்.** | ஆதன உரிமையாளர்கள்/ பராமரிப்பாளர்கள், வர்த்தகர்கள் | 1. சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும் பற்றைகள் வளர்ந்தும் காணப்படும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாகவுள்ள காணி உரிமையாளர்கள் / பராமரிப்பாளர்கள் பற்றைகளை துப்பரவு செய்து பொது சுகாதாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். என்பதுடன். டெங்கு பரவக்கூடிய கொள்கலன்கள், பொருட்களை காணியில் இல்லாதொழிக்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 2. உணவு குடிபானம் போன்றவை கையாளும் இடங்கள் அல்லது உற்பத்தி மற்றும் விற்பனை செய்யுமிடங்களில் கடமையாற்றும் பணியாளர்கள் மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு திருப்திகர அறிக்கையின் அடிப்படையிலேயே கடமையாற்ற அனுமதிக்கப்படல் வேண்டும். 3. 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலீத்தின் பாவனையானது 2034/33 ஆம் இலக்க 2017.09.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையின் பிரகாரம் தடை செய்யப்பட்டுள்ளது. |
| 17 | **கட்டாக்காலி விலங்குகள் தொடர்பானது.** | கால்நடைகள்/ நாய்கள் வளர்ப்போர் | சபை எல்லைக்குள், வீதிகள் மற்றும் பொது இடங்களில் கட்டாக்காலியாக விலங்குகள் நடமாடுவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. சபை எல்லைக்குள், வீதிகள் மற்றும் பொது இடங்களில் கட்டாக்காலியாக திரியும் விலங்குகள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பிரதேச சபையால் பிடிக்கப்படும். பின்னர் அவை உரிய காலத்தினுள் உரிமை கோரும் பட்சத்தில் பிடிகூலி, தண்டம் மற்றும் பராமரிப்புச் செலவுடன் மீள வழங்கப்படுவதுடன் உரிமை கோராத பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். |
| 18 | **வீதி ஒழுங்கு முறைகளை பேணல்** | ஆதன உரிமையாளர்கள் / பராமரிப்பாளர்கள், வர்த்தகர்கள் | சபை எல்லைக்குள் வீதியோரங்களில் பாதைக்கு இடையூறாக மரங்கள் மற்றும் பூக்கன்றுகள் நாட்டுதல்/ வளர்க்கப்படுதல், கொங்கிறீற்றிலான கட்டுமானம் கட்டு தல், இருக்கைகள் அமைத்தல், இளைப்பாறல் மடங்கள் கட்டுதல், நடைபாதை வியாபாரம் செய்தல் என்பன பொது மக்களிற்கு இடையூறாகவும், பொது ஒழுங்கு சீர்குலை வுக்கும் காரணமாக காணப்பட்டால் அவை தடை செய்யப்படும் என்பதுடன் வளவிலிருந்து வீதியைநோக்கி வெளியே வளர்ந்திருக்கின்ற தாவர மற்றும் மரக்கிளை களை உடனடியாக அகற்றுதல் வேண்டும். சபை எல்லைக்குள் அதிகரித்த போக்குவரத்து காரணமாக விபத்துக்களை தவிர்த்துக்கொள்ளும் முகமாக வியாபார நிலையங்களுக்கு முன்னால் பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத் தரப்படுகின்றது. மேலும் போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் கல், மண், சல்லி போன்ற கட்டடப்பொருட்கள் சேமித்துக் கொள்வதும் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. |
| 19 | **பொது மயானங்களின் பயன்பாடு** | மயானங்களை பயன்படுத்துவோர் | 1. எமது சபையின் எல்லைக்குட்பட்ட எந்தவொரு பொது மயானங்களில் சபையின் அனுமதியின்றி உடலங்களை எரித்தல்/ புதைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது. 2. எந்தவொரு மயானங்களில் உடலங்களை எரித்தல்/ புதைத்தல் செயற்பாடுகள் பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி அனுமதி பெற்ற பின்னரே மேற்கொள்ளப்படல் வேண்டும். 3. கட்டணத்தை செலுத்துவதற்கு அலுவலக வேலை நாட்களில் மு.ப.8.30 மணி தொடக்கம் பி.ப.3.00மணி வரை உரிய உபஅலுவலகத் திலும் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட் களில் புத்தூரில் அமைந்துள்ள பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும் செலுத்தி அனும தியை பெற்றுக்கொள்ள முடியும். 4. அனுமதிக்காக மேற்குறிப்பிட்ட இடங்களில் விண்ணப்பத்தை பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பதுடன் இறப்பு தொடர்பான உரிய ஆவணங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். |
| 20 | **கழிவு நீர்** | ஆதன உரிமையாளர்கள் / வர்த்தகர்கள் | பகிரங்க வெள்ள வடிகால்களில் வீட்டுக் கழிவு நீர், வியாபார நிறுவனங்களின் கழிவு நீர் சேர்க்கப்படல் சட்டவிரோதமானதாகும். அவ்வாறு செயற்படுவோர் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் ஏற்புடைய நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் சகல பொதுமக்களும் மிகவும் கவனமெடுத்து செயற்படுமாறும், குறித்த அறிவித்தல்களை பின்பற்ற தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**தியாகராஜா நிரோஷ்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**

(C-4693) 2025.12.30

# இன்று ஒரு தகவல் 509

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## சோதனை ஏன்?

ஆண்டவன் அடிக்கடி என்னை சோதிக்கிறான் சார்! இது பலபேருடைய கவலை. இப்படிக் கவலைப்படுபவர்களுக்கு ஆறுதலாக ஒரு கதை கிடைத்தது. (ஸ்ரீ பகவத் கிருபா என்னும் ஹிந்தி நூலில் உள்ள கதை) அதை உங்கள் காதில் போட்டு வைக்கலாம் என்று ஒரு ஆசை.

ஒரு காலத்திலே ஒரு பெரியவர் இருந்தாராம். ஆண்டவன் அவருக்கு அடிக்கடி தரிசனம் கொடுப்பது வழக்கமாம். சும்மா வந்து தரிசனம் கொடுப்பது மட்டும் இல்லை. கொஞ்ச நேரம் உட்கார்ந்து அவர்கூட பேசிக்கொண்டிருந்து விட்டுப் போவதும் வழக்கமாம்.

ஒருநாள் இவரைத் தேடிக்கொண்டு ஒரு ஏழை பக்தர் வந்து சேர்ந்தாராம். வாழ்க்கையிலே ரொம்பக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறவர்.

இவர் வந்து அந்தப் பெரியவரைப் பார்த்தார். "ஏன்? நீங்கள்தான் அடிக்கடி ஆண்டவனிடம் பேசிக்கொண்டிருக்கிறீர்களே! எனக்காக ஒரு விடயம் அவரிடம் கேட்டுச் சொல்லக்கூடாதா" என்றார்.

என்ன கேட்க வேண்டும்? சொல்லுங்கள்! கேட்டுச் சொல்கிறேன். "அவர் ஏன் எனக்கு கஷ்டத்திற்கு மேலே கஷ்டமாக கொடுத்துக் கொண்டிருக்கிறார்? என்று கேட்டுச் சொல்லுங்கள்!

இவ்வளவுக்கும் நான் தினமும் அவரைத்தான் கும்பிட்டுக் கொண்டிருக்கிறேன். பூஜை செய்து கொண்டிருக்கிறேன் இருக்கின்ற கஷ்டம் போதாது என்று நேற்று என்னுடைய சின்ன குடிசையும் இடிந்து விழுந்துவிட்டது! இப்போது தங்கக்கூட இடமில்லை. தவிக்கிறேன்! நான் என்ன தவறு செய்தேன் ஆண்டவனிடம் கொஞ்சம் கேட்டுச் சொல்லுங்களேன்!" என்றார்.

"சரி கடவுள் வரட்டும் கேட்டுச் சொல்கிறேன்" என்றார் அந்தப் பெரியவர். கொஞ்சநாள் கழித்து ஒருநாள் பகவான் வந்தார் அந்தப் பெரியவரைப் பார்க்க! உடனே இவர் அந்த ஏழை பக்தர் சொன்ன விடயத்தைப் பற்றி ஆண்டவனிடம் கேட்டார்.

"இதற்கு நான் பதில் சொல்கிறேன் ஆனால் அதற்கு முன்னால் நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்!" என்றார் கடவுள்.

"என்ன செய்ய வேண்டும்?" என்றார் இவர். ஒரு செங்கல் வேண்டும்! என்றார். உடனே அந்தப் பெரியவர் புறப்பட்டு பக்கத்து நகரத்திற்குப் போனார். அங்கே பார்த்தால் எல்லாம் பெரிய பெரிய கட்டடமாக இருக்கு அதிலேயிருந்து செங்கல்லை எடுக்க இவருக்கு மனது வரவில்லை.

இவர் இப்படி பார்த்துக்கொண்டே நடந்து போய்க்கொண்டிருந்தார்.

அங்கே - பாதி இடிந்து போன ஒரு வீடு. மீதியும் எப்போது இடிந்து விழலாம் என்று பார்த்துக்கொண்டிருந்தது.

இவர் போய் அதிலேயிருந்து ஒரு செங்கல்லை பிடித்து இழுத்தார். இவர் இழுத்த வேகத்திலே மீதிக் கட்டடமும் பொல பொல என்று கொட்டிப் போனது!

இவர் அதைப் பற்றி கவலைப்படவில்லை. அந்த ஒரு செங்கல்லை எடுத்துக்கொண்டு வந்து கடவுளிடம் கொடுத்தார். இந்தக் கல்லை எங்கே இருந்து எடுத்துக்கொண்டு வந்தாய். இவர் விபரம் சொன்னார். ஒரு பழைய வீட்டிலேயிருந்து எடுத்துக்கொண்டு வந்தேன் என்று! ஏன் அங்கேயிருந்த பெரிய கட்டடங்களிலிருந்து எடுக்கவில்லை என்று கேட்டார். அது எல்லாம் நல்ல கட்டடமாக இருந்தது. அதிலே எடுத்தால் அதோட அழகு கெட்டுவிடும்! பழைய வீட்டிலேயிருந்து எடுத்தது நல்லதாப் போனது! இப்போது அங்கே ஒரு புதுவீடு கட்டிவிடுவார்களே!" என்றார். இதற்கு ஆண்டவன் விளக்கம் கொடுத்தார்.

"நான் அந்த பக்தனுக்கு கஷ்டத்துக்கு மேலே கஷ்டமாக கொடுத்துக் கொண்டிருந்தது இதே காரணத்துக்காகத்தான். அவனுக்கு வைராக்கியம் அதிகரிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி செய்கிறேன்! கஷ்டங்கள் அதிகரிக்க அதிகரிக்க அவர் புதுமனிதனாக ஆகிவிடுவான்!" என்றார். இதுதான் அந்தக் கதை

இதிலேயிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய விடயம் என்ன என்றால் துன்பத்தைக் கண்டு துவண்டு போய்விடக்கூடாது. துன்பம் வரும்போது நமக்கு மன உறுதி வர வேண்டும். அந்த மன உறுதியை துணையாக வைத்துக்கொண்டு நாம் புது மனிதனாக மாற வேண்டும்.

"ஐயோ கஷ்டம் வந்துவிட்டதே!" என்று நாம் தலையிலே கையை வைத்துக்கொண்டு உட்கார்த்து விட்டால் அப்படியே உட்கார்ந்திருக்க வேண்டியதுதான்!

நம் ஆள் ஒருவர் இருக்கிறார். தான் ஆண்டவனுக்கு ரொம்ப நெருக்கம் என்று சொல்லிக்கொண்டிருப்பார். அவரிடமும் ஒரு ஆள் வந்து "ஆண்டவன் ஏன் என்னை இப்படி சோதிக்கிறார்? என்று கவலையோடு கேட்டிருக்கிறார். உடனே இவர் தன்னையே ஆண்டவனாக நினைத்துக்கொண்டு "ஒரு செங்கல் எடுத்துக்கொண்டு வா சொல்கிறேன்!" என்றார்.

இவர் போனார். ஒரு வண்டி செங்கல்லை கொண்டு வந்து இவர் முன்னால் கொட்டினார். உடனே அவரும் ஆண்டவன் மாதிரியே அதற்கு விளக்கம் கொடுத்தார். கஷ்டம் வரும்போது மனதிலே ஒரு வைராக்கியம் வர வேண்டும் என்றார். எனக்கு அந்த வைராக்கியம் இப்போது வந்துவிட்டது உங்களுக்கு வந்துவிட்டதா? என்றார்.

"என்ன என்னையே பார்த்து அப்படி கேட்கிறாய் என்றார் அந்தப் பெரியவர். இடிந்து போன வீட்டை திருப்பி கட்ட வேண்டியது நீங்கள்தான்! ஏன்னென்றால் இவ்வளவு செங்கல்லும் உங்கள் வீட்டிலே இருந்துதான் எடுத்துக் எடுத்துக்கொண்டு வந்தேன்!" என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 13)
## கட்டடங்களில் MEP(Mechanical,Electrical,Piping & Fire) சார்பாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை





### அறிமுகம்

கட்டடங்கள் கட்டத் திட்டமிடப்படும் போதே அவை எந்த வகைக் கட்டடங்கள் என அவற்றின் பயன்பாட்டு அடிப்படையில் கவனம் செலுத்தப்படும். உதாரணமாக அலுவலக கட்டடம், வியாபார கட்டடம், களியாட்ட அல்லது சுற்றுலா நோக்கமான விடுதிகள், கைத்தொழில்சார் கட்டடங்கள் வீட்டுமனை கட்டங்கள் மற்றும் Shopping Mall அல்லது இதர Commercial கட்டடங்கள் என வகைப் படுத்தப்படும். மேலே கூறப்பட்ட கட்டடங்களின் வகைகளுக்கு ஏற்ப அவற்றின் மின் பாவனை, நீர் பாவனை, தீயணைப்பு ஏற்பாடுகள் மற்றும் கழிவு நீர் வெளியேற்றும் விதங்கள், வரையறைகள் எல்லாமே வேறுபட்டனவையாக அமையும்.

### MEP Engineering

MEP Engineering என்பது தற்கால தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப கட்டடங்களில் பயன்படுத்தப்படும் (Mechanical, Electrical, Piping And Fire System) மின்னியல், இலத்திரனியல் குழாய் பொருத்துதல் மற்றும் தீயணைப்பு சார் வேலைகளில் எவ்வாறு அமைய வேண்டும் என விளக்கும் சர்வதேச ரீதியிலாக பயன்படுத்தப்படும் பொறியியல்சார் வகை தொழில்நுட்பம் ஆகும். நாம் கட்டடங்களை கட்ட திட்டமிடும் போதே நீர்ப் பம்பிகள், குழாய்கள், நீர்த்தாங்கிகள் அவை எங்கே பொருத்தப்பட வேண்டும் எங்கே பொருத்தப்படக்கூடாது என்பது திட்டமிடப்படல் வேண்டும். அதேபோன்று மின்னியல் சார் வரைபடங்கள் வரையப்பட்டு அவை அவற்றின் துறைசார் பொறியியலாளர்களின் அனுமதியுடன் அவர்களின் மேற்பார்வையின் கீழ் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு சரியாக ஏனைய அணியுடன் (Civil works மற்றும் Architectural work) உடன் ஒழுங்கமைக்கப்பட்டு கலந்துரையாடி தீர்மானங்கள் எடுக்கப்பட்டு மாற்றங்கள் செய்யவேண்டிய இடங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு கட்டடங்களின் நீண்ட கால பாவனைக்கு ஏற்ற வகையில் தரமான மின்னியல் வேலைகளை செய்துமுடிக்க உதவியாக அமையும். இங்கு கட்டட உரிமையாளர் மற்றும் கட்டுமானதாரர் இவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும். மேலும் தீயணைப்பு நோக்கத்திற்காக அவசரமாக வெளியேறும் வழிகள் (Emergency Exit) , படிகள் (Steps) மற்றும் தீயணைப்பு கருவிகள் என்பன கவனத்தில் கொள்ளப்பட்டு அதனோடு lift (மின்னுயர்த்திகள்) இருப்பின் அவை எவ்வாறு அமையப்பெற வேண்டும் அவற்றிற்கான மின்னியல் வேலைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பவை பற்றியும் கவனத்தில் கொள்ளப்பட்டு முறையான அனுமதியுடன் கூடிய மேற்பார்வையோடு கட்டடங்களில் பொருத்தப்பட வேண்டும். இவ்வாறாக Mechanical, Electrical, Piping And Fire System போன்ற அனைத்தையும் ஒன்றாக சேர்த்து MEP Engineering என தற்காலத்தில் கட்டட நிர்மானம் சார் அணியினர் பயன்படுத்துகின்றனர்.





### வரைபடங்களும் நன்மைகளும்

1. கட்டடங்கள் கட்டப்படுகின்றபோது முறையாகத் தயாரிக்கப்பட்ட MEP வரைபடங்களை பயன்படுத்தி வேலைகள் செய்யப்படும் போது கட்டடங்கள் ஒரே தடவையில் நிறைவடைந்து பயன்படுத்தவும் தயாராகிவிடும். மாறாக MEP வரைபடங்களின் துணைகொண்டு கட்டியெழுப்பப்படாத கட்டங்கள் மீண்டும் மீள்புனரமைப்போ அல்லது மீள் நிர்மாணத்திற்கோ வழி வகுக்கும்.

2. புதியதாக ஒரு கட்டடத்தை கட்ட முற்படும் போது உள்ளூராட்சி சபைகளின் அனுமதிபெறல் அவசியமாகிறது. இங்கு MEP வரைபடங்களைக் கொண்டு உருவாக்க முற்படும் கட்டடங்களுக்கான அனுமதி இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

3. MEP வரை படம் உள்ள கட்டடத்தில் எதிர் காலத்தில் அல்லது குறிப்பிட்ட சில வருடங்களுக்கு MEP சார் திருத்த வேலைகளையோ மற்றும் அவற்றுடன் தொடர்புடைய புதிய புனரமைப்பு வேலைகளையோ செய்து கொள்ளுவது இலகுவாக அமையும்.




### மக்களால் ஏற்படும் தவறுகள்

1. MEP சார் வரைபடம் இன்றி குறிப்பிட்ட ஓர் நபரிடம் கட்டட வேலைகளை ஒப்படைத்து விடுவதால் எதிர்காலத்தில் திருத்த வேலைகள் ஏற்படும்போது ஏற்கனவே எவ்வாறு மின்னியல், நீர்க்குழாய் மற்றும் கழிவுநீர் வெளியேற்றம் என்பன எவ்வாறு உள்ளது என்பது தெரிந்திருக்கவாய்ப்பில்லை. அவ்வாறு முன்னைய வேலைகளின் வடிவமைப்பு தெரிந்தால் மட்டுமே திருத்தங்களைச் செய்வது இலகுவானதாக அமையும்.

2. MEP சார் வேலைகளை கவனிக்காமல் அல்லது கருத்தில் கொள்ளாமல் கட்டடங்களை கட்டி கட்டுமானத்தவர்களிடம் ஒப்படைத்துவிட்டு உரிமையாளர்கள் விலகி இருப்பதும் தவறு. அவ்வாறு ஒப்படைத்ததும் வரைபடங்களை காட்டுமாறு பொறியியலாளர்கள் அல்லது அணியிடம் ஆலோசனைகளை பெற வேண்டும்.

3. குறைந்த செலவில் யாரேனும் தங்களால் முடியும் செய்துதருகின்றோம் என்று கட்டடத்தை கட்ட கோரியதும் அவர்களிடம் அதனை ஒப்படைத்துவிட்டு பின்னர் கேள்வி கேட்க முடியாத நிலைமைக்குள் சிக்கிவிடுவது இங்கு MEP வரைபடம் இல்லாது கட்டடத்தை கட்டுவதனால் ஏற்படும் தவறுகளில் உள்ளடங்கும்.

மேலும் .அவ்வாறு கொடுப்பதாக இருந்தாலும் BOQ இனை தருமாறு கேட்டு அவற்றில் இந்த Material இன்ன தரம் அல்லது Brand இல் பயன்படுத்த வேண்டும் என தீமானித்து ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு கட்டடகாரர்களால் அறுதியாக கூறுமிடத்தே தவறுகள் ஏற்படுவதைத் திருத்திக்கொள்ளல் இலகுவானதாக அமையும்.

### கட்டடத்தின் நீண்டகால மற்றும் தடங்கலற்ற MEP Systems

1. கட்டடங்களை கட்ட தீர்மானிக்கும் போதே மின்னியல் நீரிணைப்பு. கழிவுநீர் வேளியேற்றம் மழைநீர் வெளியேற்றம் மழைநீர் சேமிப்பு மற்றும் தீயணைப்பு சார் அனைத்து விடயங்களையும் MEP Engineering அணியிடம் கலந்துபேசி வரைபடமாக்கி செலவுகளை மதிப்பீடு செய்து வேலைகளை வரைபடத்தின்படி செய்ய வேண்டும்.

2. தரமான பொருட்களை MEP Engineering சார் அணியின் ஆலோசனையுடன் கொள்வனவு செய்து பயன்படுத்த வேண்டும். இங்கு அவர்கள் கட்டடத்தை அடிக்கடி பார்வையிடவேண்டியதன் அவசியமும் புலப்படுத்தப்படுகிறது.

3. MEP Engineering அணியின் மேற்பார்வை மற்றும் வாராந்த கண்காணிப்பின் கீழ் வேலைகள் நடைபெறுவதை நாம் உறுதிப்படுத்தவேண்டும்.

4. மின்னியல் வேலைகள் அனுபவமான அணியினரால் செய்யப்பட வேண்டும். இல்லையேல் அங்கு அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்பட்டு கட்டிடம் பாவனைக்கு உதவாததொன்றாக மாறிவிடும்.

5. நீரிணைப்பு மழைநீர் குழாய்கள் மற்றும் கழிவு நீர் குழாய் இணைப்பு வேலைகள் தனியான இடத்திலே செய்யப்பட்டிருக்க வேண்டும். மின்னியல் சார் ஊடாக குழாய்களை பொருத்தக்கூடாது. அறைகளின், MEP Engineering வேலைகளை ஏனைய வேலைகள் நடைபெறும்போது ஒன்றோடொன்று சிக்கலை உருவாக்காத வகையில் செய்து அவற்றிற்கான திருத்தவேலைகளை எதிர்கொள்ளும் வகையில் கட்டடத்தை நீண்ட வருடத்திற்கு பயன்படுத்தும் நோக்கோடு நிறைவு செய்து பயன்படுத்தவேண்டிய கடப்பாட்டை புரிந்து கொண்டு அனைத்து வேலைகள் அலுவல ர்களும் கட்டப்பட்ட கட்டடம் பயன் படுத்த உகந்த ஒன்றாக அமையும் என்பதில் பெருமையும் திருப்தியும் அடைவதே பொறியியல் அணியின் நீண்டகால விருப்பமாகும்.

**இலங்கை பொறியியலாளர்கள் சங்கம், வடக்கின் அத்தியாயம்.**

---

# இராசிபலன்

30.12.2025
மார்கழி 15 , செவ்வாய்க்கிழமை
ஏகாதசி பின்னிரவு 1.46 மணி வரை

பரணி பின்னிரவு 1.12 மணிவரை
சுபநேரம் 10.59-12.29 மணிவரை
இராகுகாலம் 3.29-4.59 மணிவரை

சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம்
சந்திராஷ்டமம்-
அத்தம்,சித்திரை.

**வளவன்**

**மேஷம்** — திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**ரிஷபம்** — பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்,வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**மிதுனம்** — பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** — நண்பர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**சிம்மம்** — மறைமுகப் போட்டிகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படலாம், மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** — கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்** — நண்பர்களின் மூலம் நன்மைகள் இடம் பெறலாம், உறவினர் வருகையால் உற்சாகம் கூடும், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** — பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பண வரவு திருப்தி தரும், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு.

**தனுசு** — புத்தி சாதுரியமாக நடந்து பொருள் வரவைப் பெருக்கிக் கொள்வீர்கள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**மகரம்** — வர வேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்** — பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வழிபாட்டால் குதூகலம் காணும் நாள், உடன் பிறப்புக்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், போசன சுகமுண்டு.

**மீனம்** — குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், தனவரவு திருப்தி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு.

**அன்பு குறைந்த இடத்தில் குற்றங்கள் பெரிதாகத் தெரியும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மணல் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாதா?

கட்டுமானத்துக்குத் தேவையான மண்ணைப் பெற்றுக் கொள்வதில் பொதுமக்கள் கடும் இடர்பாடுகளை எதிர்நோக்கியுள்ளனர்.

தவிர, ஒரு டிப்பர் லோட் மணல் மண் ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபாயாக விற்கப்படுகிறது எனும்போது ஏழை மக்கள் ஏதேனும் கட்டுமானப் பணியைச் செய்ய முடியுமா என்ன?

தவிர மண்ணின் அதீத விலை உயர்வு காரணமாக தரமற்ற மண் விற்கப்படுகின்ற துர்ப்பாக்கிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

ஆக, அதிக பணத்தைச் செலவிட்டு தரமற்ற மண்ணைக் கொள்வனவு செய்து அதில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் போது, அந்தக் கட்டிடங்களின் தரம் என்பது கேள்விக்குரியதாகின்றது.

உண்மையில் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் குறைந்த விலையில் மணல் மண்ணைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்போது, வட மாகாண மக்கள் மட்டும் கட்டுமானத்துக்குத் தேவையான மண்ணுக்கு அதிக விலை கொடுப்பதென்பது எந்தவகையிலும் நியாயமாகாது.

அதேநேரம் வடபகுதி மக்கள் கட்டுமானத்துக்குத் தேவையான மண்ணைப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பது தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் பல தடவைகள் விவாதிக்கப்பட்டுள்ளன.

இதன்போது கட்டுமானத்துக்குத் தேவையான மண்ணைப் பெற்றுக் கொள்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதிமொழி வழங்கப்படுகின்றதே தவிர, அது தொடர்பில் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

ஆம், மணல் மண்ணைப் பெற்றுக் கொள்வதில் பொதுமக்கள் கடுமையாக இடர்படுகின்றனர் என்பதுடன் அதற்காக மூன்று, நான்கு மடங்குக்கு மேலதிகமாகப் பணத்தைச் செலவிட வேண்டியும் உள்ளது.

எனினும் இதுபற்றி அரச நிர்வாகம் மௌனமாக இருந்தால், பொதுமக்கள் என்னதான் செய்ய முடியும்.

எனவே கட்டுமானத்துக்குத் தேவையான மண்ணை குறைந்த விலையில், இலகுவாகப் பெற்றுக் கொள்ளும் வகையில் மண் விநியோகத்தைச் சீர்செய்ய வேண்டும்.

அதேநேரம் மணல் மண் விடயத்தில் அரச நிர்வாகம் தொடர்ந்தும் மௌனமாக இருக்குமாயின் அல்லது காலம் தாழ்த்துமாயின் அதன் விளைவாக சட்டவிரோத மண் அகழ்வு நடப்பதற்கும் தரமற்ற மண்ணை விற்பதற்குமான சூழ்நிலை தவிர்க்க முடியாததாகிவிடும்.

எனவே இதுவிடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சுமுகமான முடிவை எடுக்க வேண்டும்.

அதைச் செய்வது அவர்களுக்குக் கடினமாக இருந்தால், தென்பகுதியில் இருந்தேனும் மண்ணைக் கொண்டுவருவது பற்றிச் சிந்திக்கலாம்.

மாறாக, இவை எதனையும் செய்யாமல் வாழாதிருந்தால், வடக்கின் கட்டுமானப் பணிகள் ஸ்தம்பிதமடைய அதனூடு அபிவிருத்தியும் மந்தமடைவது இயல்பேயாம்.

# பேரிடர் தொடர்பாக உரிய நேரத்தில் எச்சரிக்கவில்லை

## அரசுக்கு எதிராக நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யத்தீர்மானம்

டித்வா சூறாவளி குறித்து உரிய நேரத்தில் எச்சரிக்கை விடுக்கத் தவறியமைக்காக அரசாங்கத்திற்கு எதிராகக் கூட்டு எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுதந்திர சட்டத்தரணிகள் சங்கம் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யவுள்ளது.

"டித்வா" சூறாவளியின் ஆபத்துகள் குறித்து முன்கூட்டியே பொது மக்களுக்குத் தெரிவிக்கத் தவறியமை மற்றும் முறையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்காமை ஆகியவற்றுக்காக ஜனவரி 15 ஆம் திகதிக்குள் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

பல அரச நிறுவனங்களும் அதிகாரிகளும் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டதால் பெரும் உயிர்ச் சேதங்களும் சொத்துச் சேதங்களும் ஏற்பட்டுள்ளதாக சங்கத்தின் அழைப்பாளர் சட்டத்தரணி தினேஷ் விதானபத்திரன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இந்த அலட்சியப் போக்கு பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக இந்த மனுவில் வாதிடப்படவுள்ளது.

2019 உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புச் சம்பவத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் தண்டிக்கப்பட்டமை இந்த வழக்கிற்கு முன்னுதாரணமாகக் கொள்ளப்படும்.

மேலும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தூரநோக்கற்ற ஆட்சியால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி குறித்த உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புகளும் ஆதாரங்களாக முன்வைக்கப்படவுள்ளன. (ம-7)

# கண்டி நாவலப்பிட்டி பிரதேச செயலகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்

கண்டி மாவட்டம் நாவலப்பிட்டி, பஸ்பாகே கோரளை பிரதேச செயலகத்தின் களஞ்சிய அறையில் வெடிகுண்டு இருப்பதாக அலுவலகத்தின் மின்னஞ்சல் முகவரிக்கு வந்த செய்தியைத் தொடர்ந்து நேற்று (29) பிரதேச செயலக வளாகம், களஞ்சிய அறை உட்பட சகல பகுதிகளிலும் சிறப்பு தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டிலிருந்து குறித்த மின்னஞ்சல் வந்ததோடு, நேற்று பிற்பகல் 2.00 மணியளவில் வெடிகுண்டு வெடிக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாவலப்பிட்டி பொலிஸார், சிறப்புப் படை, இராணுவ வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவு ஆகியோர் களஞ்சிய அறைகளைச் சரிபார்த்து சந்தேகத்துக்குரியவிதத்தில் எதுவும் இல்லை என்பதை உறுதிப்படுத்தினர். (ம-7)

# குஷ் போதைப்பொருளுடன் கட்டுநாயக்கவில் இரு பெண் உட்பட நால்வர் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் 268.40 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள "குஷ்" போதைப்பொருட்களுடன் இரு பெண் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கையானது நேற்று (29) காலை விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் பணியகத்தின் அதிகாரிகள் குழுவால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் அந்த போதைப்பொருட்களை தாய்லாந்தின் பெங்கொக்கிலிருந்து வாங்கி இந்தியாவின் மும்பைக்கு கொண்டு வந்து அங்கிருந்து நேற்றுக் காலை 07.50 மணிக்கு இண்டிகோ விமானம் 6.E.-1185 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

சந்தேகநபர்களில் இருவர் பொரளை மற்றும் ஒருகொடவத்தை பகுதிகளைச் சேர்ந்த பெண்கள் என்றும் மற்ற இரு ஆண்களும் தெமட்டகொட மற்றும் ஒருகொடவத்தை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், அவர்கள் தங்கள் பயணப் பொதிகளில் 20 பொட்டலங்களில் 20 கிலோகிராம் 684 கிராம் "குஷ்" என்ற போதைப் பொருளை மறைத்து வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டனர். (ம-7)

# கிழவன்காடு கலாமன்றின் தெய்வீகக் கலையரங்கு

(காரைநகர்)

காரைநகர் கிழவன் காடு கலாமன்றத்தின் ஏற்பாட்டில், திருவெம்பாவை உற்சவத்தின் ஆறாம் நாளை முன்னிட்டு தெய்வீக கலையரங்கு இன்று (30) செவ்வாய்க்கிழமை கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் மாலை 4.00 மணிக்கு இடம்பெறவுள்ளது .

மாணிக்கவாசகர் சுவாமிகள் விழா மண்டபத்திற்கு எழுந்தருளலுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் "அமுதால் உன்னைப் பெறலாமே" எனும் தலைப்பில் ஆன்மீகச் சிறப்பு சொற்பொழிவை கலாநிதி ஆறு. திருமுருகன் ஆற்றவுள்ளார்.

தொடர்ந்து ஈழத்து இளங்கலைஞர்கள் இணைந்து வழங்கும் "நிருத்தியார்ப்பணம்" எனும் விசேட நாட்டிய நிகழ்ச்சி அரங்கேறவுள்ளது.

விழாவின் ஓரங்கமாக அரச நடன தேசிய மட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று காரைநகருக்குப் பெருமை சேர்த்த மாணவர்கள் மற்றும் அவர்களை வழிநடத்திய ஆசிரியருக்கு சிறப்பு கௌரவிப்பு வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் கலந்துகொள்ள விரும்புபவர்களுக்காக யாழ்ப்பாணம், வண்ணை சிவன் கோவில் அருகாமையில் உள்ள கலா மன்ற யாழ் கிளையிலிருந்து (இல. 428, கே. கே. எஸ் வீதி) பி.ப 3.30 மணிக்கு பேருந்து சேவை ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# இரு வேறு விபத்து இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டின் இரு வேறு பகுதிகளில் இடம்பெற்ற வீதி விபத்துகளில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

கெகிராவ - தலாவ வீதியின் கிரலோகம பகுதியில், தலாவையிலிருந்து எப்பாவல நோக்கி பயணித்த கார் ஒன்று எதிர்த்திசையில் வந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் காரில் பயணித்த சாரதி, ஆண் மற்றும் மூன்று பெண்கள் காயமடைந்து தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது குறித்த ஆண் உயிரிழந்தார்.

இதேவேளை தங்காலை வீதியின் கடற்கரை வீதிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவரும் உயிரிழந்தார்.

மாத்தறையிலிருந்து கடற்கரை வீதியூடாக கந்தர நோக்கிப் பயணித்த வான் ஒன்று வலதுபுறமாக திரும்ப முற்பட்ட போது, பின்னால் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துனர் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் - 2026

## வெற்றிமேல் வெற்றி வந்து சேரும்



நிம்மதியை விரும்பும் ரிஷப ராசியினருக்கு 2026 ஆம் ஆண்டு வெற்றி மேல் வெற்றி வந்து சேரும் வருடமாக அமைய நல்வாழ்த்துக்கள். எந்த ஒரு செயலிலும் வேகம் இருக்கும். நேரத்திற்கு நல்ல சாப்பாடு ஆரோக்கியத்தை காப்பாற்றக்கூடிய வகையில் ஓய்வு நிம்மதியான தூக்கம் சந்தோஷமான வாழ்க்கை என நிம்மதியாக இருப்பீர்கள்.

பத்தில் ஒரு பாவி இருக்க வேண்டும் என்பது ஜோதிட பழமொழி. இந்த 2026 ஆம் ஆண்டு பத்தாம் இடத்தில் ராகு பகவான் இருப்பதால் தொழிலில் முன்னேற்றமான பலன்களை எதிர்பார்க்கலாம். ஏற்றுமதி இறக்குமதி தொழிலில் இருப்பவர்களின் சாதனைகள் பாராட்டப்படும். இதுவரை தடை தாமதத்தை ஏற்படுத்திய அனைத்து முயற்சிகளும் சாதகமாகும்.

### குருவின் சஞ்சார பலன்கள்

ஆண்டின் துவக்கத்தில் தனம், வாக்கு, குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருபகவான் 2026 ஜூன் 2 முதல் வெற்றி ஸ்தானத்திற்கு செல்லப் போகிறார். குருபகவான் தனம், வாக்கு ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் 5 மாத காலம் திட்டமிட்டு செயற்பட்டால் பெரிய தொகையை சம்பாதிக்க முடியும். நீங்கள் விரும்பிய இடப்பெயர்ச்சி நடக்கும்.

ஊர் மாற்றம் வேலை மாற்றம் பதவி மாற்றம் வரலாம். தொழிலில் கடந்த காலங்களில் நிலவிய நெருக்கடிகள் குறைந்து படிப்படியாக முன்னேற்றம் உண்டாகும். ஸ்திர சொத்துக்களில் முதலீடு செய்யக் கூடிய அமைப்புகள் உள்ளது. தாயையும் தாய் வழி உறவுகளையும் அனுசரித்துச் செல்ல வேண்டும். அடமான நகைகள் சொத்துக்களை மீட்கக்கூடிய அமைப்பு உள்ளது.

உடன்பிறந்தவர்களால் ஏற்பட்ட மனக்கசப்புகள் மறையும். கற்ற கல்வி பலன் தரும். நிரந்தர வேலை கிடைக்கும். முடிந்தவரை பிறர் விடயத்தில் தலையிடாமல் இருந்தால் பிறர் மதித்திடக் கூடிய உயர்வான நிலையை அடைவீர்கள்.

ஆரோக்கியத்தில் தனி கவனம் செலுத்தினால் மருத்துவச் செலவு குறையும். கண், பல்,முகம் போன்றவற்றில் அறுவை சிகிச்சை செய்ய உகந்த காலமாக இருக்கும். திருமணத்திற்கான முயற்சிகள் சாதகமாகவே இருக்கும். பெரிய எதிர்பார்ப்பை குறைத்தால் 2026 இல் திருமணம் நடக்கும்.

### சனியின் சஞ்சார பலன்கள்

ரிஷப ராசிக்கு ஆண்டு முழுவதும் சனிபகவான் லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பார். உழைப்பிற்கான பலன் கிடைக்கும். சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள். கமிஷன் ஏஜென்ஸி, கான்டிராக்ட், பங்குச் சந்தை போன்ற துறையில் இருப்பவர்களுக்கு அதிர்ஷ்டமான லாபகரமான பலன் கிடைக்கும்.

பொதுவாக சனி பகவானோ ராகு கேதுவோ 11 ஆம் மிடமான லாப ஸ்தானத்திற்கு வரும்போது சுய தொழில் பற்றிய ஆர்வம் அதிகம் இருக்கும். தற்போது லாப ஸ்தானத்தில் சனி பகவான் நிற்பதால் பலருக்கு சுயதொழில் ஆர்வம் உதயமாகும்.

அடுத்து சனி பெயர்ச்சியாகி மேஷ ராசிக்கு வந்தவுடன் உங்களுக்கு ஏழரை சனி ஆரம்பமாகும். உங்கள் சுய ஜாதக ரீதியான தசா புத்தி சாதகமாக இருந்தால் இப்போது புதிய தொழில் தொடங்கலாம். தசா புக்தி சாதக மற்றவர்கள் இருப்பதை காப்பாற்றிக் கொள்வது நல்லது.

நடக்க கூடிய தசா புத்திகளே ஒருவருக்கு வாழ்வின் பலன்களை நிர்ணயிப்பதால் பெரிய முயற்சிகளில் ஈடுபடுவதற்கு முன்பு சிந்தித்து செயற்படுவது நல்லது. அதே நேரத்தில் முதலீடு இல்லாத சுய தொழில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது.

### ராகு கேதுவின் சஞ்சார பலன்கள்

ஆண்டின் துவக்கத்தில் 4 ஆம் மிடமான சுகஸ்தானத்தில் கேதுவும் 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்தில் ராகு பகவானும் நின்று பலன் தருவார்கள். 5.12.2026 அன்று கேது பகவான் 3 ஆம் இடமான வெற்றி ஸ்தானத்திற்கும் ராகு பகவான் 9 ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்திற்கும் செல்கிறார்கள். பொதுவாக 4,10 ஆம் இடங்களில் ராகு கேதுக்கள் சஞ்சரிக்கும் காலம் லக்னத்திற்கும் ஏழாம் இடத்திற்கும் பாதிப்பு ஏற்படும்.

இந்த காலகட்டங்களில் திருமணத்திற்கு வரம் தேடுபவர்கள் மிகுந்த கவனத்துடன் தேட வேண்டும் தவறான வரனை நம்பி பின்னாளில் வருத்தப்படக்கூடாது.

அதே போல் நண்பர்கள் தொழில் கூட்டாளிகள் வாடிக்கையாளர்கள் வாழ்க்கை துணையுடன் எந்தவித கருத்து வேறுபாடும் வைத்துக் கொள்ளக் கூடாது. தாயின் ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. சிலர் தாய் வழி உறவுகளுடன் தேவையற்ற பகைமையை ஏற்படுத்திக் கொள்வார்கள்.

புதிய சொத்துக்களை வாங்கும் போதும் விற்கும்போதும் அனுபவஸ்தர்களின் ஆலோசனையை கேட்பது நல்லது. சிலர் தவறான விலை நிர்ணயம் செய்துவிடுவார்கள்.

உதாரணமாக ஒருவர் வாங்கக் கூடிய சொத்தின் மதிப்பு 5 லட்சம் என்றால் 6 லட்சத்திற்கு வாங்குவார்கள். அதேநேரத்தில் ஒருவர் விற்கக்கூடிய சொத்தின் மதிப்பு 5 லட்சம் என்றால் 4 லட்சத்திற்கு விற்பார்கள். இழப்பு எந்த விதத்தில் வேண்டுமானாலும் ஏற்படும் என்பதால் சாதகம் பாதகம் அறிந்து செயற்பட வேண்டும்.




### கிருத்திகை 2, 3, 4

திடீர் முன்னேற்றங்கள் உண்டாகும் வருடம். லாப ஸ்தானத்தில் நிற்கும் சனிபகவான் எதிர்பாராத வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் தரலாம்.

காலம் கனியும் போது கிடைக்கும் சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டும். வீடு, வாகன யோகம் மற்றும் முன்னோர்களின் நல்லாசியும் கிடைக்கும். சகோதர சச்சரவுகள் விலகும். குடும்ப உறுப்பினர்கள் முயற்சிக்கு பக்க பலமாக இருப்பார்கள். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்.

விரைவில் சிலர் தொழில், வேலைக்காக குடும்பத்தை பிரிந்து வெளியூர், வெளிநாடு செல்லலாம். பொருளாதாரத்தில் தன் நிறைவு உண்டாகும். பெண்களுக்கு புகுந்த வீட்டினரின் அன்பும், அரவணைப்பும் கிடைக்கும்.

அரசு பணியாளர்கள் வீண் பழியிலிருந்து விடுபடுவார்கள். திருமண வரன் பார்ப்பதில் கவனம் மற்றும் பொறுமை தேவை. சிலருக்கு விருப்ப திருமணம் நடைபெறும்.

வீடு, வாகன யோகம் கை கூடி வரும். ஆடம்பர பொருட்கள் வாங்கும் ஆர்வம் அதிகரிக்கும். ஆரோக்கிய குறைபாடு அறுவை சிகிச்சையில் சீராகும். வியாழக்கிழமை நவக்கிரக குரு பகவானை வழிபடவும்.

### ரோகிணி

சந்திரனின் ஆதிக்கம் பெற்ற ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு 2026 ஆம் ஆண்டில் விவேகத்துடன் செயற்பட்டு விரும்பிய இலக்கை அடைவீர்கள். தனித்திறமை வெளிப்படும். முயற்சியில் தளர்ச்சி இல்லாத வளர்ச்சி உண்டாகும். புதிய தேடல்கள் உருவாகும். பொருளாதார நெருக்கடிகள் குறையும். உடன் பிறப்புகளால் அனுகூலமும், ஆதாயமும் உண்டாகும். பொன்,பொருள், சேர்க்கை அதிகரிக்கும். வாழ்க்கைத் தரம் உயரும். எதையும் சமாளித்து நம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். பெற்ற பிள்ளைகளால் மகிழ்ச்சியும் நிம்மதியும் உண்டாகும்.

தந்தை வழி உறவுகளிடம் இருந்த சங்கடங்கள், பிரச்சினைகள் விலகி ஆதரவு உண்டாகும். தொழில், உத்தியோக ரீதியான வழக்கின் தீர்ப்பு சாதகமாகும். கடன், நோய், எதிரி தொல்லைகள் அகலும். கணவன், மனைவி அன்பாக இல்லறம் நடத்துவார்கள். புதிய வீடு வாங்குதல், புதிய வீடு கட்டி குடிபுகுதல், போன்ற பாக்கிய பலன்கள் இனிதே நடந்தேறும்.

போட்டி பந்தயங்களில், கலந்து கொள்பவர்கள் வெற்றி வாய்ப்பு அதிகமாக உள்ளது. நீண்ட காலமாக தீர்க்க முடியாத பல பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும்.

### மிருகசீரிஷம் 1,2

எதிர்பாராத தன லாபம் உண்டாகும் வருடம். தன்னம்பிக்கை மற்றும் தைரியம் அதிகரிக்கும். தொழிலை விட்டு விலகி விடலாம் என்று நினைத்தவர்களுக்கு கூட நம்பிக்கையை அதிகரிக்கும் விதமான மாற்றங்கள் ஏற்படும். அரசு உத்தியோகத்திற்கு நல்ல செய்தி தேடி வரும்.

வருமானம் அதிகரிக்கும். பழைய கடனை அடைக்க புதிய கடன் வாங்கிய நிலை மாறும். தேவையற்ற செலவுகள் குறைந்து சேமிப்பு உயரும்.

புதிய சொத்துகள் வாங்கும் போது முறையான பத்திரப் பதிவை ஏற்படுத்திக் கொள்வது அவசியம்.

புத்திர பிராப்தம் உண்டாகும். திருமணத் தடை அகலும். மன ரீதியாக, உடல் ரீதியாக அனுபவித்த வேதனைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் நேரம். அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலையில் இருந்த நோய்கள் சாதாரண வைத்தியத்தில் குணமாகும்.

குல தெய்வ கோவில் மற்றும் ஆலயத் திருப்பணிகளில் ஆர்வம் அதிகரிக்கும். கணவன், மனைவி ஒற்றுமையாக இருந்தாலும் மூன்றாம் நபரின் குறுக்கீடு நிம்மதி குறைவை ஏற்படுத்தும் என்பதால் பிறரின் நயவஞ்சக பேச்சை நம்பக்கூடாது. வழக்குகளின் தீர்ப்பு சாதகமாகும். அர்த்தநாரீஸ்வரர் வழிபாடு சிறப்பு.

**பரிகாரம்:** சுப பலனை அதிகரிக்க கால பைரவரை அரளி மாலை அணிவித்து வழிபடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல்...

காணாமல்போன உடுத்துறையைச் சேர்ந்த பிரபல உதைபந்தாட்ட வீரரான 27 வயதுடைய ஜெசிந்தனைத் தேடும் பணி நேற்று இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது. கடற்றொழிலாளர் மற்றும் கடற்படை இணைந்து குறித்த தேடுதல் பணியில் ஈடுபட்டனர்.

எனினும் இதுவரை குறித்த இளைஞன் கண்டுபிடிக்கப்படவில்லை. தற்போது கடல் கொந்தளிப்புக் காரணமாக சுழியோடிகள் மூலம் தேடும் பணி மேற்கொள்ளப்பட முடியாதுள்ளதாக தேடும் பணியில் ஈடுபடும் கடற்படையினர் தெரிவித்தனர். (ம-7,60)

## 131 கிலோ...

கிளிநொச்சியில் 131 கிலோ கஞ்சா நேற்று மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், கிளிநொச்சி - பன்னங்கண்டி பகுதியில் 131 கிலோ எடையுடைய கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது.

சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்து மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த கஞ்சா மீட்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## பல்கலைக்கழக...

படத் தீர்மானித்துள்ளனர்.

அரசாங்கத்தினால் அண்மையில் முன்வைக்கப்பட்டுள்ள பல்கலைக் கழகச் சட்டத்திருத்தத்தில் காணப்படும் முரண்பாடுகள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுத் தலைவர் அனுப்பிய இரண்டு கடிதங்களை உடனடியாகத் திரும்பப் பெறக் கோரியும் அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்கள் இன்று 30ஆம் திகதி ஒருநாள் அடையாள தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளன.

குறிப்பாக பீடாதிபதி மற்றும் திணைக்களத் தலைவர் நியமனம் தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதங்களை உடனடியாகத் திரும்பப் பெறாவிடின், தொடர்ச்சியான தொழிற்சங்க போராட்டங்களில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்படும் என அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனத்தின் உபதலைவர் எம்.ஏ.எம்.சமீம் அறிவித்துள்ளார். (ம-7)

## ஓய்வூதிய...

வூதியக் கொடுப்பனவு காலத்தை மேலும் நீடிக்க விவசாய மற்றும் விவசாயக் காப்புறுதிச் சபை தீர்மானித்துள்ளது.

அனர்த்தம் காரணமாகத் தபால் நிலையங்களுக்குச் செல்வதில் ஏற்பட்டுள்ள சிரமங்களைக் கருத்திற் கொண்டு, இந்த மாதத்திற்குரிய விவசாய ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்கான காலத்தை ஜனவரி 31 ஆம் திகதி வரை நீடிக்க அந்தச் சபை தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய டிசம்பர் மாதத்திற்கான ஓய்வூதியத்தை ஜனவரி 31ஆம் திகதி வரை வேலை நாட்களில் அந்தந்த தபால் மற்றும் உப தபால் நிலையங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ள விவசாய மற்றும் மீனவ ஓய்வூதியதாரர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## வேறு ஒருவரின்...

பெயரை ஜனாதிபதி விரைவில் பரிந்துரைக்கவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

தேசிய கணக்காய்வு அலுவலகம் கடந்த 7ஆம் திகதி முதல் கணக் காய்வாளர் நாயகம் அல்லது பதில் கணக்காய்வாளர் நாயகம் இன்றி இயங்கி வருகின்றது.

இதற்கு முன்னர் ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்ட எச்.டி.பி. சந்தன, எல்.எஸ்.ஐ. ஜயரத்ன மற்றும் இராணுவத்தின் உள்வாரி கணக்காய்வு பணிப்பாளர் ஓ.ஆர்.ராஜசிங்க ஆகியோரின் பெயர்கள் அரசியலமைப்பு சபையினால் நிராகரிக்கப்பட்டன.

இறுதியாக ஆர்.ராஜசிங்கவின் பெயர் பரிசீலனைக்கு வந்தபோது, அதற்கு ஆதரவாக 4 வாக்குகளும் எதிராக 5 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இந்த நிலையில் ஜனாதிபதியின் பரிந்துரைகள் காரணமின்றி நிராகரிக்கப்படுவதாக அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ கவலை வெளியிட்டுள்ளார். (ம-7)

## வடமராட்சி...

கோவில் மேற்கு கடற்றொழிலாளர் சங்கத்திற்கு உட்பட்ட சங்க உறுப்பினர்கள் நேற்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தாழையடி நன்னீர் திட்ட நிறுவனத்தால் வடமராட்சி கிழக்கு கடல் தொழிலாளர் சமாசத்திற்குட்பட்ட அனைத்து துணைச் சங்கங்களுக்கும் இரண்டு படகுகள் வெளி இணைப்பு இயந்திரத்துடன் இலவசமாக வழங்கப்பட்ட நிலையில் அந்தப் படகுகள் சமாச நிர்வாகத்தினர் முன்பாக கலந்துரையாடலின் மூலம் தெரிவு செய்து வழங்கப்பட்டு வந்தன.

இதேவேளை குறித்த படகு வழங்கலில் முறைகேடு நடைபெற்று இருப்பதாக அண்மைக் காலமாக வடமராட்சி கிழக்கின் பல சங்கங்களின் பிரதிநிதிகள் தொடர் குற்றச்சாட்டை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு இருப்பதாகத் தெரிவித்து வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் மேற்கு மக்கள் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்துக்கு முன் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர். (ம-7)

## இந்தி...

ஏற்பட்டிருந்தது.

இப்பொருள் இந்திய விண்வெளி ஆய்வு மையத்தினால் (ISRO) விண்ணிற்கு ஏவப்பட்ட ரொக்கெட்டின் ஒரு பகுதி என ஆரம்ப கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில தினங்களாக திருகோணமலை ஆழ்கடல் பகுதியில் மிதந்து வந்ததாகக் கூறப்படும் இந்த உலோகப் பாகம், நீரோட்டத்தின் காரணமாக நேற்றுமுன்தினம் மாலை சம்பூர் கடற்கரையை வந்தடைந்தது.

இதனை அவதானித்த மீனவர்கள் உடனடியாகப் பாதுகாப்புப் பிரிவினருக்குத் தகவல் வழங்கினர்.

தற்போது கரை ஒதுங்கியுள்ள பாகத்தின் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு, சம்பூர் பொலிஸ் பிரிவின் அறிவுறுத்தலின் பேரில் கடற்படை வீரர்கள் அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இது குறித்த ஆய்வுகள் நிறைவடையும் வரை பொதுமக்கள் அருகில் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மின்சார...

நிறுவுவது தொடர்பில் சீன அரசாங்கத்தின் தலையீட்டை அமைச்சர் விஜித ஹேரத் கோரியுள்ளார்.

அதன்படி நேற்றுக் காலை வெளியுறவு அமைச்சகத்தில் சீன தூதர் குய் ஜென்ஹோங்குடன் நடைபெற்ற சந்திப்பின்போது அமைச்சர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். (ம-7)































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 24 - 06 - 1933 | 25 - 12 - 2025 |

## கதிரன் கந்தசாமி

(ஓய்வுபெற்ற எழுது வினைஞர், சுகாதாரம் மற்றும் வீடமைப்புத் திணைக்களம்)

யாழ். அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி, கொழும்பு, இந்தியா, Toronto கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கதிரன் கந்தசாமி அவர்கள் கடந்த 25-12-2025 வியாழக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கதிரன் அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னர் லட்சுமி தம்பதிகள் மற்றும் காலஞ்சென்றவர்களான தவசி காமாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நாகம்மா, இராசேஸ்வரி ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற லோகேஸ்வரன், விக்னேஸ்வரன், விமலேஸ்வரன், வரதேஸ்வரன், சத்தியேஸ்வரன், யாமினி, சர்மினி ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகமணி, தேவராஜா, காலஞ்சென்ற பீதாம்பரம், அம்பிகாதேவி, பராசக்தி, காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பவளரதி, ஒடிலியா, அறிவரசி, ஜெசிமா, உஷாந்தினி, ஜீவன், ராஜ்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் ரோஜன் ஜென்சியா, கரிசன் ஒரேலியா, லாரா, றோஜர், ஜெரிசன், லக்ஷன், நெலிசா, ஆதிரன், ஆசிகன், யோசுவா, சாறா, கிர்த்திக், கிசானன் ஆகியோரின் அன்புப் பேரனும் சயான், சயிசன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் காலஞ்சென்றவர்களான பரமானந்தம், செல்லத்துரை, அன்னம்மா மற்றும் புவனேஸ்வரி, பரமேஸ்வரி, கோபாலசிங்கம், இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 30.12.2025 செவ்வாய்க்கிழமை காலை 07.30 - 9.30 மணியளவில் Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada இல் பார்வைக்கு வைக்கப்பட்டு காலை 09.30 - 11.30 மணியளவில் Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada இல் கிரியைகள் இடம்பெற்று நண்பகல் 12.30 - 01.30 மணயளவில் Christ the King Catholic Cemetery 7770 Steeles Ave E, Markham, ON L6B 1A8, Canada இல் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கொள்கின்றோம்.

(6424) தகவல்: குடும்பத்தினர்


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், .நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4702) 076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378, 076 097 3127

வேலையாட்கள் தேவை

- யாழ். நகரிலுள்ள வீட்டில் வயோதிபர் (ஆண், பெண்) இருவரைப் பராமரிப்பதற்கு பெண் வேலையாள் தேவை.
- வீட்டை சுத்திகரிப்பதற்கு ஆண் வேலையாள் தேவை.

(C-4700) தொடர்புகளுக்கு: 077 234 9933

வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தை அண்மித்த சிற்றுண்டிச்சாலைக்கு வேலையாட்கள் தேவை. (வயது எல்லை - 35 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்) (6418)

077 275 9799

மணல் விற்பனை/ பொமிட் போட்டு தரப்படும்

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற பூச்சு மணல் விற்பனைக்கு உண்டு. மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ் மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும். 35000/= (1868)

076 324 9977

யாழ்ப்பாணத்தில் Voyzant

கனடாவை தலைமையகமாகக் கொண்ட உலகளாவிய "வொய்சன்" நிறுவனத்தின் சேவைகள்


- விமான பயணச்சீட்டுக்கள்
- பயணக் காப்புறுதி
- விசா சேவைகள்
- வெளிநாட்டு சுற்றுலா

மேலதிக விபரங்களுக்கு: Voyzant(PVT)Ltd

No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். (OLR Church இற்கு அருகில்)

077 284 9535, 021 222 6866 (6308)


# 01 ஆம் ஆண்டு நினைவு நாள் அழைப்பிதழ்



கடந்த 10.01.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் திரு. கைலாசபிள்ளை சிறிவரதன் (வரதன்)

[ வேலணை மேற்கு சிற்பனை முருகன் ஆலய நிர்வாக சபை உறுப்பினர், கலட்டி கற்பக விநாயகர் ஆலய நிர்வாக சபை உறுப்பினர், உரிமையாளர் - SKAT கேபிள் விஷன்(கட்டப்பிராய்), வரதன் எலக்ரிக்கல்ஸ் மற்றும் சரண்ஜா தொலைத்தொடர்பு நிலையம்(கஸ்தூரியார் வீதி) ]

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 14.06.1964 | 10.01.2025 |

வருடம் ஒன்றாகியதோ! வெஞ்சின விதி எங்கள் குலச்சூரியனைக் கவர்ந்து சென்று...
வலியோடும் பிரிவுத்துயரோடும் விழிமூடா வாழ்க்கைப் பயணத்தில் எங்களை
இணைத்து...வருடம் ஒன்றாகியதோ அப்பா!!!
உடைந்து போவதற்கும் உட்கார்ந்து அழுவதற்கும் போதுமளவான
தனிமைகளைப் பரிசளித்து...
உங்கள் பிரிவுப்புள்ளியில் உறைந்து போன எங்கள் காலக்கடிகார முட்களுக்கும்
வருடம் ஒன்றாகியதோ அப்பா!!!

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை இன்று 30.12.2025 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.30 மணியளவில் சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் கவுஸ்) நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

"கைலை வாசம்" இல66, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(C-4703)

தகவல்:– குடும்பத்தினர்
0777 570 103, 076 7320 241

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.121, பிரவுன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.